ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரூ. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 காஞ்சிபுரம் 3—3—1946 இதழ் 46

சிறு கதை

## தேடியது, வக்கீலே!

—(சௌமியன்)—

"பலமான அடி! இரத்தம் வெள்ளம்போலவந்தது.டாக்டர்! கொஞ்சம் அவசரமாக வரவேண்டும். ஆசாமி மூர்ச்சையாகி விட்டிருக்கிருன்."

"ஏன் சார்? அடிபட்டது யாருக்கு?"

"இந்த ஆளுக்கு"

"இல்லை, நீ போடுகிற கூச்சலைப் பார்த்தால், உனக்குத்தான் அடிபட்டது, அதனலேதான் இப்படி அலறுகிருய் என்று நினைத்தேன். இங்கிதமே தெரிவதில்லை. வேறு எந்தஇடத்திலே வேண்டுமானலும் கூவலாம் கொக்கரிக்கலாம், டாக்டர்கள் இருக்கும்இடத்திலே நிசப்தம் இருக்கவேண்டும், தெரிகிறதா?"

"சரிதான், சார்!"

* * *

டாக்டர், நர்சுக்குச் சாவதானமாகச் சில விஷயங்கள்—வைத்திய சம்பந்தமாகத்தான் — கூறிவிட்டு, பிறகு வந்தார். அடிபட்ட ஆசாமி, பலகைமீது படுத்துக் கிடந்தான். சட்டை பூராவும் இரத்தமயம். பக்கத்திலே நின்றுகொண்டிருந்தான், டாக்டரைஅவசரப்படுத்தியவன்.

"என்ன இது?" என்று கேட்டார் டாக்டர். யாரோ போலீஸ் அதிகாரி பேசுவதுபோல இருந்தது, அவருடைய குரல், பாவனை, பார்வை.

"இவன் என் நண்பன். எக்கச்சக்கமாக ஒரு இடத்தில் அகப்பட்டுக்கொண்டான்; இப்படி அடித்துவிட்டார்கள்"

"போலீசுக்கு அல்லவா போகவேண்டும், அங்கே சென்று, அடிபட்டவிதம், அடித்த ஆளின்பெயர் இடம் இவைகளைக் கூறிவிட்டு வந்தால், பிறகு அவர்களே என்னை அழைப்பார்கள்"

"போலீசுக்குப் போவதற்கில்லை"

"ஏன்? குடித்துவிட்டு ஆடினனு; கூத்திவீட்டில்அடிபட்டவனு? அல்லது திருடிஉதைபட்டானு? போலீசுக்குத் தெரியக்கூடாதவிதத்திலே அடிபட்ட "மர்மம்" என்ன?"

"ஐயயோ, நீங்கள் வீணகவெல்லாம் சந்தேகப்படுகிறீர்களே! அப்படி ஒன்றுமில்லை. இவன், தன்னுடைய நெருங்கிய உறவினரிடம் அடிபட்டான், அதைப் போலீசுக்குத் தெரிவிப்பதற்கில்லையென்றேன்; வேறொன்றுமில்லை"

* * *

இந்தப் பேச்சுக்கிடையிலேயே, டாக்டரின் திட்டப்படி, கம்பவுண்டர், அடிபட்ட இடத்தைச்சுத்தம் செய்து மருந்துபூசி, கட்டுக்கட்டிவிட்டான். அடிபட்டவனின் கண்கள் கொஞ்சம் திறந்தன, மீண்டும் மூடிக்கொண்டன. டாக்டர், ஒரு முழுங்கு பாலை, அவன் வாயில் கொட்டச் சொன்னர். அந்தச் சடங்கும் முடிந்தது. பிறகு, கம்பவுண்டர் 'பில்' தயாரிக்கலானர்.

"பெயர்?"

"என் பெயரா?"

"இல்லைய்யா, இவன் பெயர்?"

"இவன் பெயர், இருதயநாதன்!"

"விலாசம்?"

"தற்போது, என் வீட்டு விலாசந்தான், 18-பக்கிரிப்பிள்ளைசந்து"

"உன் பெயர்?"

"எம்பெருமான் பிள்ளை"

பில் தயாரிக்கப்பட்டது. பணமும் தந்துவிட்டார். பிறகு, பணிவுடன்டாக்டரிடம், எம்பெருமான் பிள்ளை ஒரு விஷயும் கூறினர்.

"இன்று இரவு, இங்கேயே இருக்கவேண்டும்; வேறே இடத்திலே சௌகரியம் இல்லை. என் வீட்டிலே ஒரு கலியாணக் கூட்டம்வந்திருக்கிறது" என்ருர். டாக்டர், அதற்கான 'பில்' தயாரிக்கச் சொல்லி விட்டு, நோயாளிக்கு வேண்டியவைகளைக் கவனித்துக் கொள்ளும்படிகம்பவுண்டருக்குக் கட்டளையிட்டுவிட்டு, கார் ஏறி, பங்களா சென்ருர். ஏன் அடிபட்டான்? எப்படி அடிபட்டான்? என்பதுபற்றி மேலால் தகவலும் கேட்கவில்லை; அடி பலம், அல்லது சாமான்யம், என்ற தகவலும் தரவில்லை. இதுபோல எத்தனையோ, 'கேசுகளை'க் கண்டவர், இதிலே அவர் திடுக்கிடவோ ஆச்சரியமோ படுவாரா!

* * *

படுக்கையில் புரண்டபடி, இருதயநாதன் பிதற்ற ஆரம்பித்தான். எம்பெருமான், "என்னப்பா இருதயம்! ரொம்ப வலியா?" என்று கனிவுடன் கேட்டான், "பால் வேண்டுமா? பழம் வேண்டுமா?" என்று கேட்டான், இருதயநாதனே, கேள்விகளுக்குப் பதில் கூறவில்லை, ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற வார்த்தைகளைக் கூறிக்கொண்டும், மிரட்சியுடன் பார்த்துக்கொண்டும் இருந்தான். கம்பவுண்டரோ, "காலையிலே எல்லாம் சரியாகப்போகும்" என்ற பாடத்தையே திருப்பித் திருப்பிச் சொன்ஞன்.

இரவு மணி பனிரண்டுக்கு, இருதயநாதன், கொஞ்சம் பலமாகப் பிதற்றினன். எழுந்தோடிப்போய், "என்னப்பா இருதயம்" என்று எம்பெருமான் அன்புடன் கேட்டான். தன்னுடன் பேசுவது எம்பெருமான் என்றுகூட இருதயநாதனல் தெரிந்து கொள்ள முடியவில்லை.

"நான், இப்போது எங்கே இருக்கிறேன்?" என்று கேட்டான்.

"டாக்டர் வீட்டிலே அப்பா!" என்று எம்பெருமான் பதிலளித்தான்.

"டாக்டர் வீட்டிலா? வக்கீல் வீட்லல்வா இது!" என்று கேட்டான் இருதயநாதன்.

கம்பவுண்டர், அப்போதுதான் கொஞ்சம் பயந்து, "ஏன் சார்! இந்த ஆசாமிக்குப் பைத்யமோ?" என்று கேட்டான் எம்பெருமானை. "இல்லையே, சார்! அடிபட்ட அதிர்ச்சியிலே ஒரு சமயம் மூளை......." என்று எம்பெருமான் கலக்கத்தோடு கூறினன், "இருக்கலாம்! அப்படியும் சில கேஸ் உண்டு!" என்ருன் கம்பவுண்டர்.

"இதைப்போன்ற கேஸ், நீங்கள் கேள்விப்பட்டே இருக்க மாட்டீர்கள் சார், எந்த வக்கீலும் கேள்விப்பட்டிருக்க மாட்டார் சார்! இந்தக் கேசை மட்டும் நீங்கள் ஜெயித்துக் கொடுத்தால், ஜெகம் புகழும் சார், உங்களை" என்று இருதயநாதன், உரத்த குரலிலேயே கூறலானுன்.

"என்ன சார் இது! வக்கீல், கேஸ், என்று உளறுகிருனே" என்று கம்பவுண்டர் கேட்டார். எம்பெருமான் இருதயநாதனைச் சாந்தப்படுத்திப் படுக்க வைத்துவிட்டுக் கம்பவுண்டரிடம், "இவன் வக்கீல் தேடி அலைந்துதான், இந்த வம்பை விலைக்கு வாங்கிக் கொண்டான். தேடிவந்தது வக்கீலை, அடைந்ததோ டாக்டர் வீட்டை" என்ருன். கம்பவுண்டருக்குச் சந்தேகம் அதிகரித்தது; ஏதடா! இவனும் என்னென்னமோ உளறுகிருனே என்று பயந்தார். அதைச் சூக்ஷமமாகத் தெரிந்து கொண்ட எம்பெருமான், புன்னகை செய்து, "கம்பவுண்டர் சார்! நானும் பைத்யக்காரனல்ல, என் நண்பனும் பித்தனல்ல. உண்மையில் நடந்ததைத்தான் சொன்னேன். இன்று காலை முதல், வக்கீலைத் தேடித் தேடித்தான் அலைந்தான் என் நண்பன்

(அடுத்த பக்கம் பார்க்க)

## வாழ்க தொண்டர் படை!

(புதுவைச் சிவம்)

★

தொண்டாற்ற எழுந்ததுபார், கறுப்புச் சட்டைத்
தொண்டர்படை திராவிடத்தின் மாசு போக்க!
தொண்டின்றேல் வாழ்வுநிலை தூய்மை யாமோ?
சுகமந்த வாழ்வினிலே மிளிர்வ தாமோ?
எண்டிசையும் உயர்ந்தின்று விளங்கு தற்கே
எழுச்சியுறும் தொண்டர்படைச் செயலே யன்றே?
வண்டமிழர் அதைமறந்தார்; வாழ்வி ழந்தார்!
வகுத்திட்டார் அப்படையைப் பெரியா ரின்றே!

முன்னளில் இந்நாட்டு மக்கள் வாழ்வு
முற்போக்கில் அனுதினமும் செல்லக் கண்டோம்!
பின்னளில் அந்நிலைதான் முற்றும் மாறிப்
பிற்போக்கில் பிலஞ்சேர்ந்தே யழுந்தக் கண்டோம்!
அன்னதற்குக் காரணந்தான் என்ன வென்றே
அறிதற்கும் முடியாத நிலையில் மக்கள்,
இன்றேங்கி யுழலுகின்றர்! இதனைப் போக்க
எழுச்சியுறும் தொண்டர்படை தேவையன்றே?

பகுத்தறிவு வளர்வதற்கும், மக்கள் கொண்ட
பாழான வழக்கங்கள் தொலைவ தற்கும்,
மிகத்துன்பம் தருகின்ற சாதி பேதம்
மேல்கீழ்என் றுரைக்கு மத சாத்திரங்கள்
தகர்த்திந்தத் திராவிடத்தில் மக்கள் யாரும்
சமதர்ம வாழ்வின்பம் கொள்ளு தற்கும்.
வகுத்தஉயர் நெறிப்படியே தொண்டு செய்ய
வந்ததொரு தொண்டர்படை வாழ்க! வாழ்க!!

## ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,
சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.


## தேடியது, வக்கீலை!

1-ம் பக்கத் தொடர்ச்சி

அவனுக்கு உதவியாக நானும் சென்றேன். வக்கீல் தேடிய பலன் மண்டையில் அடி, மயக்கம் என்று ஆயிற்று. அந்தக் கதையைச் சொல்கிறேன் கேளும்" என்று கூறினான்.

* * *

ஒரு நாள் மாலை, நான் வேலை பார்த்துவரும் வைரக்கம்பெனி சொந்தக்காரர் சொக்கலிங்க செட்டியார், தமது அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தபோது நான், கடைவிஷயமான ஒரு முக்கியமான தகவலை விசாரிக்க அங்கே சென்றேன். செட்டியார் அறைக்குள்ளே பேச்சுச் சத்தம் கேட்கவே, வெளியே நின்றேன். செட்டியார் மிகக் கோபத்துடன் பேசிக் கொண்டிருந்தார்.

"முடியுமா? முடியாதா?"

"முடியவே முடியாது!"

"நிச்சயமாக முடியாதா?"

"யாரடா அவன், சுத்த பன்றையாக இருக்கிறே, என் மகளை ஏதாவது ஒரு பாழுங்கிணற்றிலே பிடித்துத் தள்ளினாலும் தள்ளிவிடுவேனே தவிர, உனக்குத்தர முடியாது."

பெண் தரமுடியாது, என்று கோபமாகப் பேசியது செட்டியார்; எனக்குத் தூக்கிவாரிப் போட்டது; ஏனெனில், செட்டியாருக்குப் பெண்ணே கிடையாது!"

"ஆச்சர்யமாக இருக்கிறதே" என்று கூறினான் கம்பவுண்டர்.

"என் வாழ் நாளிலேயே நான் அது போன்ற ஆச்சரியத்தை அடைந்ததில்லை. செட்டியாருக்கு ஒரே மகன், பெண் கிடையாது. அவருக்குத் தாசி சினேகம், எதுவும் கிடையாது. ரொம்பக்கர்நாடக பேர்வழி, பக்தர். ஆகவே அவர், யாரிடமோ, "என் பெண்ணை உனக்குத்தரவே முடியாது" என்று கூறுவது கேட்டால், எனக்கு எப்படி இருக்கும். கதவு திறக்கும் சத்தம் கேட்டது, நான் விரைவில் மறைந்து கொண்டேன் ஒரு புறமாக. அறைக்கு உள்ளே இருந்து, இருதயநாதன் வந்தான்—அன்று தான் நான் இவனை முதன் முறையாகப் பார்த்தது. என்னை அவன் பார்க்கவில்லை. கோபமாக வெளியே போய்விட்டான். நான் கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, செட்டியாரிடம் பேசிவிட்டு, வழக்கப்படி வீட்டுக்குப் போனேன், உள்ளே தாழ்வாரத்திலே, இருதயநாதன் உட்கார்ந்து கொண்டிருந்தான்!"

"அடெடே! ஆச்சரியம் வளருகிறதே" என்றான் கம்பவுண்டர்.

"முடியவில்லை ஆச்சரியம்? கேளுங்கள் மற்ற விஷயத்தை. யார்? பெயர் என்ன? எதற்காக வந்தாய்? எந்தஊர்? என்று கேள்விமேல் கேள்வியூட்டினேன், அவன் செட்டியாரிடம் பேசிக்கொண்டிருந்தது எனக்குத் தெரியுமென்றே நான் காட்டிக்கொள்ளவில்லை.

"உங்கள் பெயர்தானே எம்பெருமான்பிள்ளை?" என்று என்னைக் கேட்டான் அவன், 'ஆமாம்!' என்றேன், வைரவியாபாரம் சொக்கலிங்கம் செட்டியார் கடையிலே கணக்கு எழுதுபவர் நீங்கள் தானே," என்றான், ஆமாம் என்றேன்; உங்களால் எனக்கு ஒரு காரியம் ஆகவேண்டும், என்றான், "முடிந்தால் செய்கிறேன், முதலிலே நீங்கள்யார், என்ன விசேஷம், இவைகளைக்கூறுங்கள்" என்று நான் கேட்டேன். "என்பெயர் இருதயநாதன், இருப்பிடம், திருநெல்வேலி அருகே ஒரு கிராமம்" என்றான், "சரி! என்றால் என்ன ஆகவேண்டும்?" என்று கேட்டேன், அவன் என்னிடம் ஏதும் கூறுவதற்குள், மற்றொரு கேள்வியும் கேட்டுவிட்டேன், "இன்று செட்டியாரிடம் ரொம்பக் கோபமாகப் பேசிக்கொண்டிருந்தீரே?" என்றேன், அவன் ஆச்சரியப்பட்டான், "அவர் சொல்லவில்லை, நான் தற்செயலாகக்கேள்விப்பட்டேன்" என்று கூறி அவன் ஆச்சரியத்தைத் தணியவைத்தேன்.

"நான் கூறப்போவது கேட்டு ஆச்சரியத்தால் திடுக்கிட வேண்டாம்" என்று அட்டவணை போட்டான் இருதயநாதன் "கதைஇருக்கட்டும், முதலிலே ஒரு விஷயம் கூறிவிடு, செட்டியாருக்குப்பெண் ஏது?" என்று நான் கேட்டேன். கோபமும் வெறுப்பும் வெளிப்படச் சிரித்தான் இருதயநாதன்.

"சொக்கலிங்கம் செட்டியாருக்குப் பெண்கிடையாது; ஒரே ஒரு மகன்தானே இருக்கிறான்" என்றான்.

"நீ, பெண் கொடுஎன்று கேட்டாய், அவர் என் பெண்ணைக் கிணற்றிலே தள்ளினாலும் தள்ளுவேன், உனக்குத்தரவேமாட்டேன் என்றும் சொன்னாரே!" என்று கேட்டேன். "நான் சொக்கலிங்கம் செட்டியாரைப் பெண்கேட்கவில்லையே, சொரூபானந்தஸ்வாமியைக் கேட்டேன்!! என்று அவன் சொன்னான். நான் மிரண்டேன், புரியாமல். "இருதயநாதன்" புரியாது உங்களுக்கு. உங்கள்சொக்கலிங்கம் செட்டியார், எங்களுக்குச் சொரூபானந்தஸ்வாமி. சொக்கலிங்கம் செட்டியாருக்கு ஒரு மகன் இருப்பது போலவே, சொரூபானந்தஸ்வாமிக்கு ஒருபெண், பெயர் கருணை! உங்கள் ஆச்சரியம் அதிகமாகி விட்டிருக்கும், விரைவில் போக்கிவிடுகிறேன். இங்கு வைரவியாபாரம் செய்யும் சொக்கலிங்கம்செட்டியார், பலவருஷங்களுக்கு முன்னால், எங்கள் பக்கத்திலே சொருபானந்தஸ்வாமியாக உலவி, வைதீகத்தை வியாபாரம் செய்து கொண்டிருந்தார், இப்போதுகூட எங்கள் பக்கத்திலேவந்தால் சொரூபானந்த சாமிகளின் மடாலயம் இருக்கக் காணலாம். அருள்பெற்றவர் என்று, அவரை வணங்காதவர்கள் கிடையாது. வருஷத்துக்கு ஒருமுறை தான் வருவார், இரண்டொரு மாதங்களே தங்குவார், காணிக்கை குவியும், பூஜைகள் பலமாக நடக்கும், சர்வமத சம்மதத்தைப் போதிப்பார், பிறகு போய் விடுவார். எங்கிருந்து வருகிறார், எங்கே தங்குகிறார், இங்கே வராத சமயத்தில், என்பது யாருக்கும் தெரியாது. வருஷத்தில்பத்துமாதம் வனாந்தரங்களிலே வாசம் செய்கிறார் என்றே சகலரும் கூறினர். இப்போதும் கூறுகின்றனர். சித்து விளையாடுபவர் என்று சொல்வார்கள். அவர்கள் அறிய மாட்டார்கள், உங்கள் சொக்கலிங்கம்செட்டியாரேதான், பத்து மாதம் வைரவியாபாரம் செய்துகொண்டிருப்பதும், பாக்கி நாட்களிலே எங்கள் பக்கங்களில், சொரூபானந்தராக இருப்பதுமான 'சித்து' விளையாடுகிறார் என்று. அவருடைய தரிசனத்தால் பலன்கிடைக்குமென்றுவந்தவர்களிலே, விதவை ஜோதியும் ஒருத்தி. ஜோதி, கிருஸ்துமார்க்கத்தைத்தழுவிய பிறகு வந்த பெயர்; முதல் பெயர், முத்தாயி. ஜோதியின் விதவைத்தனம் சொரூபானந்தரால் போக்கப்பட்டது; கருணை பிறந்தாள். ஊரார் இதை அறியமாட்டார்கள்; ஜோதியும், சொரூபானந்தரே, நாட்டிலே இந்தப்பக்கத்திலே சொக்கலிங்கம் செட்டியாராகஇருப்பதைத்தெரிந்துகொண்டவளல்ல. ஜோதி, கருணையைக் குழந்தையாக இருக்கும் போதே விட்டு, இறந்து போனாள். இப்போது அவளுக்குப் பதினெட்டு வயது. அழகி, அறிவாளி, படித்துத் தேறி இருக்கிறாள். இனிமையாகப் பாடுவாள். என்னை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாள். என் இருதயத்திலே அவளே நாயகி, அவளுக்கு நானே இருதயநாதன்"

"ஆமாம்! இவ்வளவு 'மர்மமும்' உனக்கு எப்படித் தெரிந்தது?" என்று நான் கேட்டேன்.

"அதுவா? அதுவும் ஒரு வேடிக்கைதான். சொரூபானந்தஸ்வாமி என்றவேஷத்திலே, சொக்கலிங்கம் செட்டி உலவி, மக்களை ஏமாற்றிப் பொருள் பறிப்பதற்கு, உடந்தையாக இருந்தவன், எங்கள் ஊர் ஆசாமி, அவனே பிரதம சீடனாக இருந்தவன்; அவன் மூலமாகவே, சொரூபானந்தரின் புகழ் பரவிற்று.

"ஸ்வாமி, எப்போது வரும்?" என்று அவனைத்தான் ஊரிலேகேட்பார்கள்.

"நேற்றிரவு சொப்பனத்திலே தோன்றினார்; தோன்றி, இன்னும் பத்துநாளிலேவருவதாகச்சொல்லி விட்டுமறைந்தார்" என்பான்சடையன் என்ற பெயரை ஜடாதரஸ்வாமி என்று மாற்றிக்கொண்ட அந்தக் கபடன்.

"ஸ்வாமி! என்மனதை வாட்டும் விஷயமாக..........." என்று பக்தர் கூறவேண்டியதுதான், உடனே சொரூபானந்தர்,

"ஏனப்பா! புதிய வீடு வாங்கி இருக்கிறாயே, அது நல்லதா அல்லவா, என்பதுதானே உன்கவலை" என்று புன்னகையுடன் கேட்பார். பக்தருக்குப்பரமானந்தம், ஸ்வாமி, மனதினுள்ளதை அறிந்து கூறிவிடுகிறாரே என்று. ஒவ்வொரு பக்தரின் மனதிலிருப்பதையும் சொரூபானந்தர் அறிந்து கூறுவார். ஏன் முடியாது? அவ்வப்போதுதான், சடையனுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் கடிதப்போக்குவரத்து நடக்கிறதே. இங்கிலையிலே, ஜடாதரஸ்வாமிக்குச், சீடராகஇருப்பது அலுத்துப்போகவே, சொக்கலிங்கம் செட்டியார் இனிமேல் சொரூபானந்த ஸ்வாமியாக வரவேண்டியதில்லை, என்றுகூறிவிட்டு, ஸ்வாமிகள் ஜோதியில் கலந்துவிட்டார் என்று தெரிவித்துவிட்டான். அவனைமீறி, சொக்கலிங்கம்செட்டியாரால், நடந்துகொள்ளமுடியாது. அவன்சொன்னதால்தான்எனக்கு, உங்கள் செட்டியார் விஷயம் தெரியும். எனக்குத் தெரிந்தது ஊராருக்கு இன்னமும்தெரியாது. நான் சொன்னாலும், ருஜுப்படுத்த ஆதாரம்இல்லை, சொரூபானந்தர், தமது கரத்திலே 'ஜோதி' என்று பச்சை குத்திக்கொண்டிருக்கிறார் என்று ஜடாதரன் சொன்னான்; தற்செயலாக அவருடைய கையைப் பார்த்தேன், 'ஜெகஜோதி' என்றுபச்சை குத்தப்பட்டிருக்கிறது, அது அவருடைய வைரத்துக்குப் பெயர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, 'ஜோதி' என்று பச்சை குத்தப்பட்ட ஆதாரமும் எனக்குத் துணை செய்யாது.

அதுகிடக்கட்டும், கருணைஎங்கே இருக்கிறாள்? அவள் உன்னைக் காதலிக்கும்போது, செட்டியாரின் சம்மதத்தை ஏன் கேட்கிறாய்? கருணைவுக்குச் செட்டியார்தான் தன் தகப்பன் என்பது தெரியுமா?" என்று நான் பல கேள்விகளைக் கேட்டேன். இருதயநாதன் கருணை, யார் தெரியுமா? அதாவது, அவள் எங்கள் ஊர் ஜோதிக்கும் சொரூபானந்தத்திற்கும் பிறந்தவள், ஆனால் ஊராரின் நினைப்பு என்ன தெரியுமா! இப்போது அவள், எல்லப்ப முதலியாரின் ஏக புத்ரி! எல்லப்ப முதலியார்; நெடு நாட்களாகக் குழந்தை இல்லாமலிருந்தார். அவர் சொரூபானந்தரின், மகிமையைக் கேள்விப்பட்டு, பிள்ளை வரம் கோரி எங்கள் ஊரில் வந்திருந்து பூஜை நடத்தினார். அந்தச்சமயத்தில் தான், ஜோதிக்குப் பெண் பிறந்திருந்தது. அதனை, சொரூபானந்தர், 'கடவுட்பிரசாதம்' என்று சொல்லி, எல்லப்ப முதலியாருக்குத் தந்தார். கருணை இன்று, எல்லப்ப முதலியாரின் மகளாக இருக்கிறாள். என்னுடன் கல்லூரியில் படித்தாள், காதலித்தோம், எல்லப்பரையே சென்று கேட்டேன், கருணையும் தைரியமாகவே அவரிடம் தன் பிரியத்தைச் சொல்லிவிட்டாள், அவரோ, எதற்கும் 'குருதேவரை'க் கேட்டுச் சொல்கிறேன் என்று கூறிவிட்டார். கொஞ்சநாள் கழித்துச்சென்றபோது, "முடியாது!" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். என்ன நடந்ததென்றால், எல்லப்ப முதலியார், சொரூபானந்தரின் கடாட்சத்தால் கிடைத்த குழந்தையின், விஷயமாக, அவரிடம் நேரில் கேட்டுச் செய்வதற்கில்லை என்றபோதிலும், சொரூபானந்தருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்திருக்கும் ஜடாதரரின் சம்மதமாவது பெற்றுத்தானகவேண்டும் என்று எண்ணினார். அவருக்குத் தெரியாது, சொரூபானந்த ஸ்வாமி என்ற வேஷமே, சொக்கலிங்கம் செட்டியின் புரட்டு என்பது. ஜடாதரர், சம்மதம் தருவதற்கு முன்பு, சொக்கலிங்கம் செட்டியாருக்கு இரகசியமாகத் தகவல் அனுப்பி விசாரித்திருக்கிறார், ஏனெனில், கருணையின் பிறப்பு வளர்ப்புச்சகல

(7-ம் பக்கம் பார்க்க)


தந்தி:- "புறுமார்க்" திருச்சி.



# மல்லிகை முல்லை பிறகு! மரவள்ளிக் கிழங்கு முதலில்!

## ஊரெங்கும் உணவுக் கழகம் அமைக்கவேண்டும்

குண்டு மழை பொழிந்ததாலும், எதிரிப்படை சூறையாடியதாலும், ஐரோப்பிய நாடுகளிலே மக்கள் மாண்டனர், இங்கோ வங்கத்திலே, சோறு கிடைக்காமல், பஞ்சத்தினுல் பல இலட்சம் மக்கள் மாண்டனர். எவ்வளவுதான் சமாதானம் சொன்னபோதிலும், மரணப்பட்டியில் புள்ளி விவரத்தை எப்படி எப்படிக் குறைத்துக் காட்டினுலும் விளக்கிக் காட்டினுலும், பட்டினியாய் பல இலட்சம் மக்கள், கங்கைபாயும் வங்கத்திலே மாண்டனர் என்பதைக் கூறும்போது, நாகரீக உலகு, அந்த நாட்டுச் சர்க்காரைப்பற்றிமதிக்கத்தான்துணியாது, சர்க்காரும் கொஞ்சம் வெட்கத்தோடுதான் தலை குனிந்து நிற்க வேண்டும். அதிலும் பிரிட்டிஷ் ஆட்சியோ, இங்கே சுகத்தையும் சுபிக்ஷத்தையும் ஏற்படுத்தும் தர்மகர்த்தா முறையை அமுல் நடத்துவதாகக் கூறிக்கொள்கிறது. பட்டினியால் தவித்து, சோர்ந்து கீழே விழும் மக்களின் கணக்கையும், பிணங்களின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்துக்கூறும் வெட்டியான் வேலைக்கா, இவ்வளவு பலம் பொருந்திய, பெருமை பொருந்திய சர்க்கார்? இன்று பட்டினியால் மாண்டவர்கள் தொகை இவ்வளவு என்று வெளியிடும்போது எந்தச்சர்க்காராக இருந்தாலும் வெட்கப்படத்தான் வேண்டும். சாகாது தப்பிப் பிழைப்பவர் மீது ஆட்சி செலுத்துவதுதான் துரைத்தனத்தாருக்கு அழகு, என்பது அர்த்தமற்ற அரசியல் முறை. மக்கள் மாளாமல், எதிரியின் மூலமோ, உள்நாட்டுக் குழப்பம் காரணமாகவோ, நோய்பரவுவதாலோ, பஞ்சம் பரவியதாலோ மக்கள் சாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய மகத்தான முதல்வேலை ஒரு நாகரீக சர்க்காருடையது. இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல் கையைப் பிசைந்த கொள்ளும் சர்க்கார், திறமையுள்ளது என்று எவரும் கூற மாட்டார்கள். நாட்டிலே நெருக்கடி ஏற்படும்போது சமாளிக்கும் திறமையைப் பொறுத்தே ஒருசர்க்காரின் குணுதிசயம் நிர்ணயிக்கப்படும். மழை இல்லை, ஆகையால்பயிர் இல்லை—பயிர் இல்லை, ஆகையால் உணவுப்பஞ்சம், என்றுபிரச்னையை விளக்குவது, சர்க்கார் மட்டுமே செய்யக்கூடியகாரியமல்ல, யாரும் செய்யலாம். இந்தப் பஞ்சத்துக்குள்ளகாரணத்தை எடுத்துக் கூறுவதைவிட, அதைவரவிடாது தடுக்கும் முறைகளைக் கண்டறிந்து, உடனுக்குடன் போதுமக்களின் கருத்தையும் தெரிந்துகொண்டு, பல்வேறு கட்சிகளின் கூட்டு ஒத்துழைப்பையும் கோரிப்பெற்று, காரியத்தில் இறங்கவேண்டும். வெறும் காகிதத் திட்டங்கள் பலன் தராது.

●

பஞ்சம் என்றுல், பல ஆண்டுகள் மழையேபெய்யாமல் ஊரெங்கும் வறண்டுபோய், ஒரு பொருளும் விளையாது, கருகிக் காய்ந்துபோன நிலைமைக்கேகூறப்படுவது. பனிரண்டு வருஷம்மழையேஇல்லை! மாடுகளுக்குக் குடி தண்ணீரும் கிடையாது, என்று கூறக்கூடிய நிலைமைக்குப் பஞ்சம்என்றுபெயர். எந்தவகையான உணவுப்பொருளும் கிடைக்காத நிலைமைக்கே பஞ்சம் என்றபெயர் பொருந்தும். இங்கோ இது போது, ஒருவருஷம், மழை இல்லை, இதற்கே பஞ்சம் என்றுல், நாம் அவ்வளவுஅன்றாடம் தேடிப் பிழைப்பவர்களாகி விட்டோம், ஒருவருஷ வரட்சியைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டது என்றல்லவா பொருள். இது அவ்வளவு பரிதாபத்துக்குரிய விஷயம். போரிலே நேரடியாக ஈடுபட்டு, பெரும் சேதத்துக்கு ஆளான ரஷியாவிலே. பட்டினி கிடையாது, பிரிட்டனிலேரொட்டிக்குக்குறைவு கிடையாது, இங்கோ போரின் வாடை மட்டுமே அடித்தது, அதற்கே நாடு சுருண்டுவிட்டது—பஞ்சப் தலைதூக்குவேன் என்றுமிரட்டுகிறது. எவ்வளவு வலிவற்றநிலைமையிலே நாட்டின் வளம் இருந்திருக்கிறது என்பதையன்றே இதுஎடுத்துக்காட்டுகிறது.

●

இவ்வளவு இன்னலுக்கும் இடையே ஒரு நல்ல குறியும் தோன்றியிருப்பது கவலையைக் கொஞ்சம் குறைப்பதாக இருக்கிறது. அதாவது, சர்க்கார், பஞ்சம் ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது என்ற உண்மையை மூடிவைக்காது இருந்தார்கள். விஷயத்தை மூடிவைத்திருந்தால், விபரீதம் திடீரென்று நாட்டைத் தாக்கிநம்மை நிலைகுலையச் செய்திருக்கும். முன் கூட்டியே எச்சரிக்கையாகஇருக்க முடிகிறது இப்போது, எனவேவர இருக்கும் ஆபத்தைத் தடுக்கவோ, அல்லது வேகத்தைக் குறைக்கவோவழி இருக்கிறது. இன்றுநமது நிலைமையைக் கவனிக்க உலகுக்கும்அவகாசம் இருக்கிறது. போர்ப் புயல் அடங்கிவிட்டதால் வெளிஉலகு, இங்குள்ள நிலைபற்றியும், போதுவாகப் பல்வேறு நாடுகளிலே ஏற்பட்டுள்ள உணவுப்பொருள் குறைவுபற்றியும் யோசிக்கவும், தக்கமுறைகளை வகுக்கவும் வழி ஏற்பட்டிருக்கிறது. சர். எ. இராமசாமி அவர்கள், பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில்ஆற்றிய உருக்கமானசொற்பொழிவு வீண்போகாது. போர்க்காலத்திலே எவ்வளவோ கஷ்டங்களைச் சகித்துக்கொண்டு நாங்கள் வெளிநாடுகளுக்கு உதவிசெய்திருக்கிறேம். வங்கப் பஞ்சத்தை உன்னினுலே நெஞ்சில் வேல்பாய்கிறது. கானடா நாட்டவரே! ஆஸ்திரேலியரே! சோவியத்தே! எங்கள் குறையைத் தீர்க்கமுன்வாருங்கள் என்று அவர் பேசியபோது, சபையில் 'நிசப்தம் நிலவியது' என்று வெளிநாட்டு நிருபர்கள் கூறுகின்றனர். அவருடைய மொழி ஆழப்பதிந்ததுஎன்று அதற்குப் பொருள். அந்தப் பேச்சும் அதைத்தொடர்ந்து நடைபெறும் முயற்சிகளும், அடியோடு வீணுகும் என்று கூறுவதற்கில்லை, நமது கஷ்டத்தை அந்த முயற்சி அடியோடு ஒழித்துவிடும் என்றும் சொல்லிவிட முடியாது. நிச்சயம் பலன் கிடைக்கும்; ஆனுல் அந்தப் பலனைமட்டுப்கொண்டு, நெருக்கடியைத்தீர்த்துவிட முடியாது. இதனைத்தான் வைசிராய் விளக்கியுள்ளார். நெருக்கும் நிலைமையைச் சீர்திருத்த இப்போதே பங்கீடுமுறையை விரிவாக்கியதும், அரிசிஅளவுகுறைந்து வேறு பொருள் தருவதுமான முறைகளை அமுலுக்குக் கொண்டுவந்ததும் அவசியமானகாரியம் என்பதை எல்லாக்கட்சியினரும் ஒப்புக்கொண்டுள்ளனர். உணவு நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சியில் சகல கட்சிகளும் ஒத்துழைக்கத் தயாராகஉள்ளன. இது ஆபத்தைத் தாண்டி நாம் கரை ஏறுவோம் என்பதைக் காட்டும் சிறந்த தோர் அறிகுறி.

வெளிநாடுகளிலிருந்து, அரிசி, கோதுமை, இவற்றுள் கோதுமையே அதிக அளவு கிடைக்க முடியும். இதனைக்கிராம மக்கள் அதிகமாக விரும்புவதில்லை, நமது பகுதியில் சர்க்கார் போதுவிதியாக, அரிசியும் கோதுமையும் இன்னின்ன அளவு தரப்படும் என்று கூறுவதைவிட, கிராமங்களில் அரிசியை அதிகமாகவும், நகரங்களில் கோதுமையை அதிகமாகவும் தருகிறமுறையைக் கையாள்வது நல்லது. நகரவாசிகள், அரிசிகோதுமை ஆகிய உணவுப்பொருளின்அளவை மிக மிகக் குறைத்துக்கொண்டு, வேறுவகையான உணவுகளை, அதாவது வெளிநாடுகளிலிருந்து கிடைக்கக்கூடிய பக்குவப்படுத்தப்பட்ட இறைச்சிவகைகள் முட்டைச்சத்து

(6-ம் பக்கம் பார்க்க)

## ★ மூவர் வருகிறார்கள்! ★



(சர். கிரிப்ஸ்)

மூவர் வருகின்றனர்! ஒருவர், சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ், முன்பு வந்து போனவர். மற்றவரில் ஒருவர், இந்தியா மந்திரி, பெதிக்—லாரென்ஸ் பிரபு; மற்றவர், அலெக்சாண்டர், கடற்படை மந்திரி!

ஏன் வருகிறார்கள்? இந்தியாவின் எதிர்காலத்திட்டத்தைநிர்ணயிக்க. வந்துபோன பார்லிமெண்டரிமெம்பர்கள் விஷயம் என்னவாயிற்று? வந்தார்கள், போனுர்கள்! இவர்கள்? ஏதாவது நிச்சயமாகச் செய்வார்களாம். செய்யலாம் — எதையும்-யாரும்! ஆனுல்நிலைக்கக்கூடிய, ஒப்புக்கொள்ளக்கூடிய முறையில் இருந்தால்தானே, அழகு. இருக்குமா? தெரியாது.

இந்திய உபகண்டம்இனி ஏகாதிபத்யத்தின் எடுபிடியாக இராது. இதனைப் பிரிட்டன் நிச்சயமாக உணர்ந்திருக்கிறது— வல்லரசுகளிலேயே மற்றப்பலத்தை விடக்கொஞ்சம் 'புத்திபலம்' அதிகமல்லவா அதற்கு! உலகிலே, தூற்றல் அதிகமாகிவிட்டது. எனவே, ஏதாவது செய்தாகவேண்டும்; இல்லையானுல் பலநாடுகள் கூடும் மாநாட்டிலே, பிரிட்டன் ஏதாவது பேசினுல்,சிரிக்கிறுர்கள், மற்றவர்கள், "சரி, சரி, உட்காரப்பா! உன் விஷயத்தை, அங்கே இந்தியாபோய்க்கேட்டாலல்லவா தெரிகிறது!" என்றுகேலி செய்கிறுர்கள். எனவே, ஏதாவது செய்தாகவேண்டும். சிறிப்போரிடும் மக்களாகிவிட்டனர், இங்கு.



(பெதிக் லாரன்ஸ் பிரபு)

இங்கே, இப்போது, பணபலம், பிரசாரபலம் இரண்டும் பெற்று, மதபயத்தினுல் மகத்தான அமைப்பாகிவிட்டது காங்கிரஸ். அந்தக் காங்கிரசின் போஷகர்கள், சூக்ஷம சூத்ரதாரிகள், வடநாட்டுமுதலாளிகள். அவர்கள், பிரிட்டிஷ் அமெரிக்க முதலாளிகளுடன் 'கூட்டு வியாபார' நோக்கம் கொண்டவர்கள். ஆகவே, சுயராஜ்யம் கொடுத்து, அதனை நடத்தும் பொறுப்பு காங்கிரசிடம் இருக்கும்படியும் செய்தால், பிரிட்டிஷாருக்கு இலாபம்! ஆகவே இப்போது பிரிட்டனுக்குக்காங்கிரஸ் ஸ்தாபனத்தின் மீது காதல்ஏற்பட்டுவிட்டது! காங்கிரஸ் கேட்கும், அரசியல் நிர்ணய சபை சம்பந்தமாக மூவர், ஏதோ திட்டம் தருவார்களாம். அரசியல் நிர்ணய சபை, இந்துக்களுக்கு ஒன்று,முஸ்லிம்களுக்குஒன்று என்று இருக்கவேண்டும் என்று ஜனுப்ஜின்னு கூறுகிறுர். முஸ்லிம் உலகின் பேச்சை, மூவர் தள்ளிவிடத்துணிந்தால், அவர்கள் திட்டம், வெறும் சிம்லாமாநாடு ஆவதன்றி வேறென்றும் இல்லை. மூவர் வருவதுபற்றி முப்புரி களிக்கிறது. காரணம், மூலதனம் இருசாராருக்கும்ஏறக்குறையஒத்திருக்கிறது.

காங்கிரசின் வெற்றியின் பாடத்திற்கேற்ப நடக்க வேண்டுமானுல் மூவர் இங்கே வரவேண்டியதில்லை! மூட்டை முடிச்சுடன் வெளி ஏறக் கப்பல்பலம் தேடவேண்டும். காங்கிரஸ் வெற்றியைக் கண்டு மட்டும் தீர்மானித்து விடக்கூடாது; வேறு



(அலக்ஸாண்டர்)

சக்திகள் உள்ளன என்ற உண்மையை உணர்ந்து நடப்பதானுல், இன அரசு ஏற்படும் விதமாக, எதிர்காலத்திட்டம் இருக்க வேண்டும். மூவர், எத்தனை[illegible] யோசனை கூறுகிறுர்களோ பார்[illegible] போறுத்திருந்து.

# திராவிட நாடு

காஞ்சி 3—3—46 ஞாயிறு


## பண்டிதர் கூறும் பக்குவம்!

இந்தியகடற்படையினர்,தங்களுக்குஏற்பட்டுள்ள குறைகளை நிவர்த்திசெய்வதற்காக வேலை நிறுத்தம் செய்ததன் காரணமாக எழுந்த கிளர்ச்சி, நாட்டின் பலபாகங்களிலும் கலவரத்தை உண்டாக்கிவிட்டது. இதனால் சிலர் மாண்டனர்; பலர் காயமடைந்தனர். கிளர்ச்சி ஓய்ந்துவிட்டது.கிளர்ச்சிக்குக்காரணமாக எழுந்த குறைகள் நிவர்த்திக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இத்தகைய குறைகள் நிவர்த்திக்கப்படுவதற்குநாட்டின் இன்றையநிலை சரியாய் இல்லை என்பது காங்கிரஸ் தலைவர்களின் அபிப்பிராயம்.

கடற்படையினர் செய்த கிளர்ச்சியினால் ஏற்பட்ட கலவரத்தைக் கண்டறிய பாப்பேசென்ற தோழர் ஜவஹர்லால் நேரு அவர்கள்,

"இந்திய நிலைமை முன்னேறிச், சுதந்தர சர்க்கார் நிறுவப்பட்ட பின், கடற்படையினரின் கோரிக்கைகள் கவனிக்கப்படும்"

என்று கூறியிருக்கிறார். இந்திய நிலைமை முன்னேற்றத்தை அடைந்து, சுதந்தர சர்க்கார் நிறுவப்படும் வரை, கடற்படையினருக்கு ஏற்பட்டகுறைகளை நிவர்த்தி செய்ய முடியாதென்பது பண்டிதரின்நோக்கம் அல்லதுவாதமானால், சுதந்தர இந்தியாவிலும், இன்றிருக்கும் கடற்படையினரும், இவர்களுக்குக்குறைபுரிந்த அதிகாரிகளும் இருப்பார்கள் என்பதும், அப்போதுதான் இத்தகைய குறைகளை நிவர்த்திக்கமுடியுமென்பதும்தானே அர்த்தம். இதோடு அவர் நிற்கவில்லை. "அஹிம்சை மூலமாகவே இந்தியா சுதந்தரத்தை நோக்கி வெகுவிரைவில் முன்னேற முடியுமென்று நான் நம்புகிறேன்" என்பதாகவும் அதே கூட்டத்தில் பேசியிருக்கிறார். எனவே, அஹிம்சை மூலமாகச் சுதந்தரசர்க்காரை நிறுவக்கூடியவர்கள் இருக்கும் ஒரு நாட்டில், அந்நாடு அஹிம்சை மூலமாகச் சுதந்தரத்தைப் பெற்றபின், அஹிம்சைக்கு மாறான அல்லது அஹிம்சைக்கு நேர் விரோதமான காரியத்தைச் செய்யும் கடற்படையும், அப்படைக்குச்,சுதந்தர இந்தியாவுக்குச் சம்பந்தமில்லாதவேற்று நாட்டு அதிகாரிகளும், அவர்களால் நம் கடற்படையினருக்குச் செய்யப்படும் கொடுமைகளும் இருந்து, அவை, அஹிம்சையோடு கூடிய சுதந்தர இந்தியாவின் துணைகொண்டு களையப்படும் என்று பண்டிதர் கூறும் 'பக்குவமான' சமாதானத்தை,அஹிம்சையையும், அதனால் அடையும்சுதந்தரத்தையும் ஆழ்ந்தழுவும் அன்பர்கள் யோசித்துப் பார்க்கவேண்டுகிறோம்.

பண்டிதரின் இந்தவாதம், கடற்படையினருக்கு இன்று ஏற்பட்டுள்ள குறைகளை நீக்கமுடியாதென்ற பரிதாப நிலைமையை விளக்குவதானாலும், அஹிம்சையோடுகூடிய சுதந்தர இந்தியாவில், அஹிம்சை 'எந்தவடிவத்தில்'நின்று பணிபுரியும் என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்ப்பதோடு, காங்கிரஸ்காரர்களால் இன்று போடப்படும் 'அஹிம்சா கோஷம்' அதன் கர்த்தாவான காந்தியாரைத் திருப்திப் படுத்துவதற்காகச்செய்யப்படும் பலகாரியங்களில் இதுவும் ஒன்றென்பது, சிறிது யோசனையுள்ளவர்களுக்கும் புரியக்கூடிய விஷயமாகும். தேசியவாதிகள் என்று சொல்லப்படுபவர்களால் கையாளப்படும் அஹிம்சா போன்ற "நாட்டு விடுதலைக்கருவிகள்" மக்களின் உண்மையான குறைகளைப் போக்கப் பயன்படாமல், மக்களுக்கு ஏற்படுகின்ற நெருக்கடியான சமயங்களிலெல்லாம், அக்கருவிகள், மக்களின் குறைகளைத் தட்டிக்கழிக்கவே பயன்படுகின்றன—இனியும் பயன்படும் என்பதை இனிமேலாவது பொதுமக்கள் உணரவேண்டும் என்பதோடு, இனியும் இத்தகைய அசம்பாவிதங்கள் ஏற்பட்டுப் பொதுமக்களின் அமைதிக்குக் குந்தகம் உண்டாக்கக்கூடிய கிளர்ச்சிகள் எழாதவாறு, சர்க்காரும் நாட்டின் இன்றைய இனஉணர்ச்சியின்வேகத்தை உணர்ந்துஅதற்கானபரிகாரத்தைச் செய்வதே முறையும் நேர்மையுமாகும்.

இனவாரி அரசியல் அமைப்பு ஏற்பட்டுவிட்டால், இத்தகைய கலவரங்கள் எழுவதற்கே இடமில்லாதபடி பார்த்துக்கொள்ள வழி உண்டாகும். ——

### கவிஞர் பாரதிதாசன் நிதிக் கமிட்டிக்கூட்டம்

சென்னை, பிப்ரவரி, 19.

நேற்று மாலை 6-மணிக்கு கமிட்டிக் காரியாலயத்தில், தலைவர் நாமக்கல் N. கிருஷ்ணராஜ் ரெட்டியார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் பதுமைப்பித்தன், ஸ்ரீபால், கம்பதாசன் குஞ்சிதம்அம்மையார், பி.எ. எல்.டி., நால்வரும் கமிட்டிஉறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். மேற்கொண்டும் உறுப்பினர் சேர்த்துக்கொள்வதுபற்றிப்பேசப்பட்டது.

தோழர் சி. என். அண்ணாத்துரை, எம் எ., அவர்கள் கமிட்டியின் பொருளாளராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். சென்னை நகர வசூல்களை கவனிக்க பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

கூட்டத்திலேயே கமிட்டி உறுப்பினர் தோழர் தி.க. இராமன், ரூபா 25, நிதிக்குக் கொடுத்தார். பணம் அனுப்புவோர் அடியில்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டப்படுகின்றனர். நிதியளித்தோர் விபரம் தொடர்ந்து பத்திரிக்கையில் வரும். முகவரி:—

C. N. அண்ணாத்துரை M. A.
பொருளாளர்
கவி. பாரதிதாசன் நிதிக்கமிட்டி
"திராவிடநாடு" காரியாலயம்
காஞ்சிபுரம்


### விளம்பரம்

**கஞ்சி டி. மு. கோர்ட்டு**
O. S. No 65/1946.

K. நரசிங்க பிள்ளை வகையறா—வாதிகள்
சர்தசாமி பிள்ளை வகையறா—பிரதிவாதிகள்

வாதிகள் தங்களுக்காகவும் மதராஸ், செங்கல்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, ஜில்லாக்களிலுள்ள பனிசிவ வேளாளர் மரபினர்களுக்கு பிரதி நிதிகளாகவும் காஞ்சிபுரம் நெல்லுக்காரத் தெரு ஷை மரபினர்கள் சத்திர வாடகை நஷ்ட விஷயமாயும் ஷை மரபினர்களுக்காக வாதிகள் மானேஜ்மெண்டை பிரதிவாதிகள் தடை செய்யாமல் இருக்கும் பொருட்டு பரிகாரங்களுக்காக ஷை நெம்பரில் தாவாசெய்து 12-3-46ந் தேதி வாய்தா போடப்பட்டிருப்பதில் ஆக்ஷேபனை உள்ளவர்கள் அன்றுகோர்ட்டில் ஆஜராகிஆக்ஷேபனையைதெரிவித்துக் கொள்ளத்தவறினால்ஒருதலையாய்த் தீர்மானிக்கப்படும் என்பதைத் தெரிவிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம், 25-2-46.
S. சுந்தரராஜ அய்யங்கார்,B.A.B.L. வக்கீல்.


## அறிவுக்கொவ்வாததை அஞ்சாது எதிர்ப்பவர்

மறைந்த தோழர் மா. சிங்காரவேலர், சிலகாலம்காங்கிரசிலும்இருந்தார். அவர் காங்கிரசில் சேர்ந்திருந்ததற்குக்காரணம், ஏகாதிபத்யத்தை எதிர்ப்பது, ஏழை மக்களின் வாழ்வைக் கெடுக்கக்கூடியபல கொடுமைகளிலே ஒன்றை எதிர்ப்பது, எளியவன்மீது பூட்டப்பட்டிருக்கும் பல தளைகளிலே ஒன்றை உடைப்பது, சமுதாயத்தை அடைத்து வைத்திருக்கும் சிறைக்கூண்டின் கம்பிகளிலே ஒருகம்பியை அகற்றுவது என்ற முறையிலே தான் மா. சிங்காரவேலர், காங்கிரசுடன் கூடி, ஏகாதிபத்யத்தை எதிர்த்தாரேயொழிய, காங்கிரசையும் அதிலும் குறிப்பாகக் காந்தியத்தையும் அவர் முதலாளி இயக்கம் (பூர்ஷுவா)என்றேகண்டித்து வந்தார். காந்தியார், "தீண்டாதாருக்குத்தனித்தொகுதிகூடாது" என்றுகூறி உண்ணாவிரதம் இருந்தபோது, காந்தியாரின் போக்கை அவர் மிக மிகவன்மையாகக்கண்டித்தார். அதுபோது அவர் தீட்டியகட்டுரை, நாட்டு விடுதலையிலும், ஏழைகள் விடுதலையிலும் அக்கரைகொண்டவர் யாவருக்கும் மனப்பாடமாகவேண்டியது என்று கூறலாம். அது, இது:—

"நமது சமதர்ம அபிப்பிராயப்படிகாந்தியார். தாழ்த்தப்பட்டோர்பால்உண்ணாவிரதம் கொள்வதாகத் தீர்மானித்தது, ஆங்கில துரைத்தனத்தாருக்குப் பெருத்த வெற்றி என்றே கூறவேண்டும். பிரிட்டிஷ் அரசியல்தந்திரத்தின்வெற்றி, இதனால் ஸ்தாபிக்கப்பட்டதென்று அறிதல்வேண்டும். காந்தியார்,தான்கொண்ட சுயராஜ்யப்போரை விட்டு விட்டு, இந்த உபயோகமற்றபிரச்சினையில் தற்கொலை செய்து கொள்வதாக உடன்பட்டது, பிரிட்டிஷாருடைய அரசியலுக்கு மாபெரும் வெற்றியெனக் கருதல் வேண்டும். (Triumph of British Diplomacy.)பிரிட்டிஷாரின் அரசியல் தந்திரத்தில், நமது காந்தியார் எங்குமிலை? (He isnowhere) அவர் எங்குமில்லை என்றே சொல்லலாம்.

ஒருகாலத்தில்சூலூஸ்(zulus)என்றஆப்பிரிக்கர்களைக்கலகப்படுத்திவிட்டுப் பிறகு ஆங்கிலேயர்கள் அவர்களை நாசமாக்கிய தைப்பார்த்து இருந்தவர். சென்ற 19ம் நூற்றாண்டுஇறுதியில், போயர் (Boers) களுடன் கூடியிருந்துவிட்டு,அவர்கள்சண்டையில் அவர்கள் விரோதியர்களுக்கு உதவியாய் இருந்தார். யூரோப்பியன்மகாசண்டையில் (The great European war) பிரிட்டிஷாருக்கு உதவிச்சேனையைத்தயாரித்து, அந்தச்சண்டைமுடிந்த பிறகு, பிரிட்டிஷாருக்கே விரோதமாக, ஒத்துழையா இயக்கத்தைத்துவக்கினர். அதையாகிலும் செம்மையாகமுடிவுக்குக் கொணர்ந்தாரா? இல்லை. யாரோ சிலர் கொல்லப் பட்டார்களென்று 50000 பேர் சிறையில்கிடக்க பர்டோலியில் அதனை நிறுத்திவிட்டார். இதுதானுஇவர் செய்தகாரியம். இத்துடன் இவர் முரண் (Contradiction)நிற்கவில்லைஉபயோகமில்லாத உப்புமறியலை ஆரம்பம் செய்து அதனால் 60000 பேரை ஜெயிலுக்கு அனுப்பிவிட்டு, டெல்லி உடன்படிக்கையில் (Delhi pact) கையொப்பமிட்டு, அதனையும் அவர்களையும் கைவிட்டார்! இதுநிற்க, சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்துவிட்டுச், சுமார் 60, 70, ஆயிரம்பேரை ஜெயிலில் அடைக்கச்செய்து, இந்துக்களையும் பஞ்சமர்களையும் பிரிக்கின்றதாகத், தனித் தொகுதியின்பேரில் தனது கோபாவேசத்தைக்காட்ட உண்ணாவிரதம் பூண்டு, தான் சாகப்போவதாகப்பறை சாற்றிவிட்டார்! இதுஎன்ன அகோரக்காட்சி என்று கேட்கிறோம்? இதனால் ஒன்று உலகம் தெரிந்துகொள்ளவேண்டும். அதாவது காந்தியார் எவ்வளவு உலகப்பிரசித்தம் பெற்றவராயினும், அவரை நம்பி எந்தக்காரியமும் செய்யலாகாதென்பதே. அவரை நம்புவதைவிடச், சேற்றில் நட்டகம்பத்தை நம்பிக்கரை ஏற எண்ணலாம்.

இவர் வாழ்நாள் முழுமையுமேமுரண்பட்டகாரியங்களாகவே இருந்துவருகின்றன. (His life is a series of contradictions) என்று யாதொரு ஆட்சேபனையுமின்றிக்கூறலாம். இவர் புகழ்' தென்னாப்பிரிக்காவிலிருந்து கிளம்பியது. அங்கேயாகிலும் நின்று தான் எடுத்த காரியத்தைச் சாதித்தாரா? 5, 6, வருஷம் அங்கே கலகத்தை மூட்டிவிட்டு, அங்கு வாழும் இந்தியக்குடிமக்களை நடு ஆற்றில்விட்டு இந்திய நாட்டுக்கு வந்துவிட்டார்! இத்தியாதி (Series of Defeats.) தோல்வியை வரிசை வரிசையாக அடைந்தவரை ஏன் இந்த உலகம்இன்னும் நம்புகின்றதோ, அதுநமக்கு விளங்கவில்லை.

இவர் உண்ணாவிரதக்கிளர்ச்சிவெறும் Clap Trap, அதாவது, வெறுங்கூச்சல் என்றே நமக்குத் தோன்றுகிறது. தாழ்த்தப்பட்டோருக்குத் தனித்தொகுதி கொடுத்தால் என்ன வென்று கேட்கின்றோம்? தற்கால ஆங்கிலேயர் திட்டத்தில் யாருக்கு என்னதான் கிடைத்துவிடப்போகின்றதென்று கேட்கின்றேன். உங்களுக்கும் பே, பே; உங்கள் அப்பனுக்கும் பே, பே; உன்பாட்டனுக்கும் பே, பே; என்று சொல்லிக்கொண்டிருக்கும் திட்டத்தில், யாருக்கு என்ன அதிகசுதந்திரம் கிடைக்கப்போகின்றது? விஷயம் இவ்வாறிருக்க, ஏன் இந்தவீண் கூச்சல் என்றுகேட்கின்றோம்? இந்தக்கூச்சல்யாவும் பகல்வேஷம் என்பதேஎங்கள் துணிபு.

இந்துக்களை, ஜாதி இந்துக்களென்றும், ஜாதியில்லா இந்துக்களென்றும், இருவகுப்பாக, இந்தத் தனித்தொகுதி பிரித்து விடுகிறதாம்! பஞ்சமர்கள்தனித்தொகுதியால், வேறுபட்டு விடுவார்களாம்!! தனித்தொகுதியால் இந்துக்கள் பஞ்சமர்களை எதிரிகளாகப் பார்ப்பார்களாம்!! இவ்விருவருடைய ஒற்றுமைக்குப்பதை வர்துவிடுமாம்!! இந்தக்கதையைக் கேட்க, ஒருபழமொழி நமது ஞாபகத்திற்கு வருகிறது. "ஆடுநனைகிறதென்று, ஓனாய்குந்தி அழுகிறதாம்!" இந்துக்கள் கடந்த 5000 வருஷமாகப் பள்ளனையும், பறையனையும், பஞ்சமனையம், தோட்டியையும், பரங்கியையும், தியாகையும், சாணரையும், மற்றும்பல தீண்டாதாரையும் (Untouchables தாழ்த்தப் பட்டோரையும்(Depressed Classes) தங்கள் தோழர்களாகப் பாவித்து வந்ததைக் கெடுக்க இந்தத்தனித்தொகுதி நடுவில்வந்து விட்டதாம்!! உலக ஒற்றுமைமங்கு அழிவு வந்துவிட்டதாம்!! என்ன விந்தை!!கோடானுகோடி தாழ்த்தப்பட்டோர் வீடு, வாசல், உணவு, ஆடை, கல்வி, சுகாதாரம், வைத்தியம், இறந்தால் வாய்க்கரிசிக்குக்கூட வழியில்லாமல் இருக்க இரண்டொரு (Votes) ஓட்டுகளால் என்னவந்து விடப்போகிறதோ அது நமக்கு விளங்கவில்லை. கடந்த 50 வருஷங்களாக இந்திய சட்டசபைகளில், பொதுத்தொகுதியால் இந்துக்கள் பஞ்சமர்கள்பால் என்ன சாதித்தார்கள் என்பதைக் கேட்கின்றோம்? இந்தக் காலமெல்லாம் 5 கோடிபஞ்சமர்களுக்கு இந்துக்களே என்ன செய்துவிட்டீர்கள்? எத்தனைகிணறுகளைக்கட்டினீர்கள்? எத்தனை வீடுகள் கட்டுவித்தீர்கள்? எத்தனை ஆஸ்பத்திரிகள்கட்டுவித்தீர்கள்? எத்தனை பள்ளிக்கூடங்கள் ஸ்தாபித்தீர்கள்? எத்தனை கல்லூரிகள் நியமனம் செய்தீர்கள்? எத்தனை சுகாதார ஸ்தாபனங்கள் உண்டாக்கினீர்கள்? எத்தனை (Free Scholar Ships) இலவசப் படிப்புக்கு உதவியளித்தீர்கள்? எத்தனை புஸ்தக சாலைகளை உண்டாக்கினீர்கள்? எத்தனை சுத்தத் தண்ணீர் வசதிகள் ஏற்பாடு செய்தீர்கள்? **ஐந்து கோடி தாழ்த்தப்பட்ட பேரின் தரித்திரத்தையும் மூடப்பழக்கங்களையும், மூடபக்தியையும் ஒழிக்க என்ன செய்தீர்கள்? என்னசெய்கின்றீர்கள்? என்ன செய்யப்போகின்றீர்கள் எனவும் கேட்கின்றோம்."**

என்று தோழர் சிங்காரவேலர் எழுதினர். கொடுமையும் அநீதியும், பசப்பும் புரட்டும், போலிவாதமும் பொய்யுரையும், எங்கு இருக்கக்கண்டாலும், சர்க்கார் மாளிகையிலே இருந்தாலும் சங்கராச்சாரி மடத்திலே காணப்பட்டாலும், பழைய ஏட்டிலே இருந்தாலும், நாட்டு விடுதலை நாடகம் நடத்துவோரின் ஏட்டிலே காணப்பட்டாலும் தோழர் மா. சிங்காரவேலர், தன்னால் முடியுமா என்பது பற்றிக்கூட யோசிக்காமல், அச்சம்தயை தாட்சண்யமின்றிக் கண்டிப்பார். அத்தகைய தீரம் அவருக்கு இருந்ததற்குக் காரணம், ஒடுக்கப்பட்டவர்கள், கொடுமைக்கு ஆளானவர்கள், ஏழை எளியவர் என்போரிடம் அவருக்கு இருந்த அன்புதான். எனவே, காங்கிரசின் போக்கு, உண்மையிலேயே இந்நாட்டு மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களுக்கு விடுதலை அளிக்கக்கூடியதல்ல வென்பதைஇக்கட்டுரையின் வாயிலாக நன்கறியலாம்.

# காமராஜர் சம்பவம்

## தொடர் கதையில் ஒரு பகுதி

# தொழுது நிற்பவர் -:- அழுது ஓய்வர்!

## இறுதி அத்யாயம் எழுதப்போவது திராவிடன்

‘காமராஜர் சம்பவம்’ இன்று தமிழ் நாடெங்கும், கொதிப்பை உண்டாக்கிவிட்டது. பல இடங்களிலே கண்டனக் கூட்டங்கள் நடக்கின்றன, சில ஏடுகள், இந்தக் கண்டனச் செய்தியை வெளியிடுகின்றன. காந்தியாரைப் புகழ்ந்துவிட்டு, அவரைத் தவறான வழியிலே போகச் செய்துவிட்ட, ஆச்சாரியாரைக் கண்டித்து வருகின்றன. இதனால் பிரமாதமான பலன் ஏற்படும் என்றோ, அல்லது தமிழகத்திலே ஏற்பட்டுள்ள கொதிப்பு நீடிக்குமென்றோ சொல்ல முடியாது. அடிதாங்க மாட்டாதது; வலி அதிகம், வலி இருக்குமட்டும் கோபம் இருக்கும், பிறகு விட்ட வழிப்படி நடக்கட்டும் என்று விஷயம் அடங்கிவிடும்.

தமிழ் நாட்டுக் காங்கிரஸ் நடவடிக்கைகளைக் கூர்ந்து ஆராய்பவர்கள், ‘காமராஜர் சம்பவம்’ 1946-ல் நடந்த முதல் நிகழ்ச்சி அல்ல என்பதையும், காஞ்சிபுரத்திலிருந்து தொடங்கி, காமராஜர் சம்பவங்கள், அவ்வப்பொழுது நடந்து வந்துள்ளன என்பதையும் உணருவர். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைமைப் பதவியையோ, அல்லது தலைவரை ஆட்டிப்படைக்கும் சூத்ரதாரிப்பதவியையோ, தமது கரத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்பதை, இந்நாட்டு ஆரியர், மிகத்திறமையாகச்செய்து வந்திருக்கின்றனர். வெற்றி பெற்றே வந்திருக்கின்றனர். புரட்சி செய்தவர்களைப் பொசுக்கி இருக்கின்றனர், தங்கள் சொந்தச் சக்தியால் அல்ல, வடநாட்டுத் தலைவர்களின் துணைகொண்டு. அன்று முதல் இன்று வரை, வடநாட்டுத் தலைவர்களுக்கு அறிமுகமான, அவர்களின் ஆதரவு பெற்ற, தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் யாவரும், ஐயர், ஐயங்கார்களாகத்தான் இருக்கும்; மற்றவர்கள் இங்கே, மக்களிடம் சொல்லொணாத செல்வாக்குப் பெற்றிருக்கலாமேயொழிய, அகில இந்தியக் காங்கிரஸ் அமைப்பிலே அவர்கள் அறிமுகமாகாதவர்களாகவும், அறிமுகமாவதற்கே யாராவது ஒரு ஐயரின் துணையை நாடவேண்டியவர்களாகவோ தான் இருப்பார்கள். அந்த நிலைமையுடன், அகில இந்தியக் காங்கிரசின் தலைமை அமைப்பு வடநாட்டிலே இருப்பதால், எந்தத் தகராறும் தீர்க்கப்படுவதற்கு, ‘அப்பீல் கோர்ட்’ அங்கே அமைந்து விட்டது. அப்பீல் கோர்ட் ஜட்ஜு, தனக்கு வேண்டியவர்என்றால், ஆரியருக்கு வழக்குச்சாதகமாகத்தானே முடியும். இதுபல ஆண்டுகளாக நடந்து வந்திருக்கிறது—நடக்கிறது—நடக்கும். பல சமயங்களில், தமிழ் நாட்டிலே பார்ப்பனக் காங்கிரஸ் தலைவர்களுக்கும் பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்களுக்கும் ‘சண்டை’ ஏற்பட்டுமக்கள் பார்ப்பனத் தலைவர்களைக் கண்டித்துப் பார்ப்பனரல்லாத தலைவர்களிடம் நம்பிக்கையைத் தெரிவித்தும், இங்கிருந்து பார்ப்பனக் காங்கிரஸ் தலைவர்கள், அனுப்பும் செய்தியை ஏற்றுக் கொண்டு வடநாட்டுத் தலைவர்கள், (எக்ஸ்பார்ட்டி) தீர்ப்பு,பார்ப்பனர் பக்கமே அளித்து இருப்பதுடன், பார்ப்பனர்களையே காங்கிரஸ் அதிகாரிகளாய் நியமித்துப்பார்ப்பனரல்லாதகாங்கிரஸ் தலைவர்கள் முகத்திலே கரி பூசி இருக்கிறார்கள். இன்று காமராஜருக்குக் காந்தியார் கொடுத்த பதப்பிரயோகம், இதற்கு முன்பு, வட நாட்டுத்தலைவர்கள் தமிழ் நாட்டுப் பார்ப்பனரல்லாதார் தலைவருக்குத்தந்திருக்கிறார்கள்.

1925-ல் காஞ்சிபுரத்தில் காமராஜர் தோன்றினார்—அதாவது, பார்ப்பனத்தலைமைக்கு எதிராகப் புரட்சி ஆரம்பமாயிற்று. இன்று காமராஜர், கண்ணீர் சிந்தினார், காஞ்சியிலே, கனல்சிந்தப்பட்டது! அந்தக் கனலும் ஓயவில்லை,கண்ணீரும் நின்றபாடில்லை.!

★

"தேர்தலுக்கு யாரார் அபேட்சகர்கள் என்பதை இப்போதே, இங்கேயே தெரிவித்து விடலாமே. மாகாணத்திலிருந்து காங்கிரஸ் பிரமுகர்கள் வந்திருக்கிறார்கள், இப்போது யாரார் காங்கிரஸ் சார்பிலே அபேட்சகர்கள் என்பதைக்கூறிவிட்டால் இவர்களெல்லாம் தத்தம் பகுதியிலே சென்று, பிரச்சாரம் புரிய சௌகரியமாக இருக்கும்" என்றார், கொங்கு நாட்டுத் தலைவர். மயிலை அய்யங்கார் அதற்கு,

"நாயக்கரவாள்! இப்போது, தேர்தலுக்கு யாராரை நிறுத்துவது என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டியதில்லை. ஒரு கமிட்டி நியமித்து விடுவோம். அந்தக்கமிட்டி, பிறகு தேர்தலுக்கு ஆட்களை நியமிக்கட்டும்" என்றார். கொங்கு நாட்டின்குறுநில மன்னர்போன்ற நிலையிலிருந்தவர், "இது கூடாது" என்றார். வார்த்தைதடித்தது. "இது அயோக்யத்தனம்" என்றார் கொங்கு நாட்டுத்தலைவர்.

"நாயக்கரவாள்! அந்த வார்த்தையை வாபீஸ் வாங்கவேண்டும்" என்றார் மயிலை ஐயங்கார்.

"முடியாது"

"வாபீஸ்! வாபீஸ்!"

"ஒருக்காலும் முடியாது"

"வாபீஸ் வாங்கத்தான் வேண்டும்"

"அதற்கு வேறு ஆளைப்பாருங்கள்"

குஞ்சம் வைத்த செருப்பைக் காலிலே மாட்டிக் கொண்டார், ஒரு! முறை, திரும்பிப்பார்த்தார், மயிலை ஐயங்காரையும், அவருடைய கூட்டத்தையும்.

"அயோக்யத்தனம் என்று சொன்னதை வாபீஸ் வாங்கவா சொல்கிறீர்கள். முடியாது. இந்த அயோக்கியத் தனத்தை இதே ஊரிலே கூட்டம் போட்டுக்கூறுகிறேன், ஊரெங்கும் கூறுவேன், இதோ புறப்படுகிறேன்" என்று கூறி விட்டுக்கிளம்பினார், அன்று ஆரம்பமான பிரயாணம், இன்றும் தொடர்ந்து நடந்து வருகிறது. மீசையுடன் இருந்தபோது ஆரம்பமான பிரயாணம், தாடி வளர்ந்த பிறகும் நடந்து வருகிறது. பெரியார் இராமசாமி அன்று தொடுத்த அறப்போர், இன்றும் நடந்து வருகிறது. அன்று பெரியார், பார்ப்பனர்கள் காங்கிரசைக்கொண்டு, பார்ப்பனரல்லாதாரைப் பாழ்படுத்துவதை நாடறியச்செய்வேன் என்று உரைத்த சூளுரையின்படியே இன்றும் நடந்து வருகிறார். அவர் காஞ்சியில் கனல் கலந்த கடுஞ்சொல் வீசிவிட்டுக் கிளம்பியது, 31-வது, தமிழ் மாகாணக் காங்கிரஸ் மாநாட்டிலே. கொங்கு நாட்டுத்தலைவர், மாநாட்டுப் பந்தலில், கமிட்டிக் கூட்டத்தின்போது மயிலை. எஸ். சீனுவாச ஐயங்கார் கோஷ்டி, காங்கிரசின் மூலம், பார்ப்பனரை,‘மூலஸ்தானங்களில்’ அமர்த்த விரும்பியதை உணர்ந்து கண்டித்தார். தேர்தல் சமயம். யாரார் அபேட்சகர்களென்று மாநாட்டிலேயே கூறிவிட வேண்டும் என்று பெரியார் வற்புறுத்தியதின் ‘சூக்ஷமம்’ என்னவென்றால்,வெளிப்படையாக மாநாட்டிலேயே கூறிவிடுவது என்றாகிவிட்டால்,தேர்தல் 6-ஸ்தானங்களில் பெருவாரியான பார்ப்பனர்களைப் போடமாட்டார்கள் என்பதே. மயிலை ஐயங்கார், கமிட்டி நிறுவ ஆசைப்பட்டதற்குக்காரணம், மாநாட்டுக்குக் கூறாமல், இரகசியத்தில் அபேட்சகர்களை நியமித்து விட்டால், பெரும்பாலும் பார்ப்பனர்களையே போடலாம் என்பதே. கடைசியில் மயிலை ஐயங்கார் மனோபீஷ்டமே நிறைவேறிற்று. என்றாலும், காஞ்சியிலிருந்து புயல் கிளம்பிற்று.

★

பார்ப்பனர்—அல்லாதார், விஷயமானசச்சரவு, காங்கிரசில் வெடிப்பதற்கு முன்பு, குமுறிக்கொண்டிருந்திருக்கிறது. 1925ல், பெரியார், பயணத்தைத் துவக்கினார். அதுவரை,உள்ளிருந்து போராடி இருந்திருக்கிறார்.போருக்குஉரியநிலைமை என்றும் மாறவில்லை — ஏனெனில் ஒரு சிறுகூட்டமாகிய பார்ப்பனர்கள், ஒருபெரிய தேசியஸ்தாபனத்தையும், ஏற்கனவே செல்வாக்குத் தரக்கூடிய பல ஸ்தாபனங்களைக் கைப்பற்றியதுபோலவே இதனையும் கைப்பற்றிச் சுயநலத்தைப் பெருக்கிக்கொள்ளமுயலும்போது உண்மை உணரும் பார்ப்பனரல்லாதார், எப்படிப் போரிடாமலிருப்பார்கள். போர் 1919 முதற் கொண்டே நடந்தது என்று கூறலாம்.

1919ல், பெரியார் காங்கிரசில் இருக்கையில், ஆச்சாரியார் யோசனையின்பேரில், தேசியவாதிகள் சங்கம் (Nationalist Association) ஈரோட்டில் அமைக்கப்பட்டு, அதற்குத்தலைவராகத் தோழர் சேலம் விஜயராகவாச்சாரியாரும்,பொதுக் காரியதரிசியாக தோழர் ராஜகோபாலாச்சாரியாரும், ஆந்திர அமைப்பாளராகத் தோழர் பிரகாசம் அவர்களும், தமிழ்நாட்டுக்கு அமைப்பாளராகப் பெரியாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உபதலைவர் ஸ்தானத்துக்குத்தோழர் வி. ஒ. சிதம்பரம் பிள்ளையின் பெயர் பிரேரேபிக்கப்பட்டது. அதனை டாக்டர் வரதராஜுலுவும் பெரியாரும் ஆதரித்தனர். ஆச்சாரியார்சம்மதிக்கவில்லை. உடனே அந்தவிஷயம், பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் வாடையைக்கிளப்பிற்று. ஆச்சாரியார், தமதுதந்திரத்தைப்பிரயோகித்தார். பிற்பகலில் பார்த்துக் கொள்ளலாம் என்று கூறிவிட்டார். பிற்பகல் மாநாட்டிலே, படைவரிசையுடன் இருகட்சியும் கூடின. உபதலைவர்கள் 5 பேர் இருக்கட்டும், அதிலே ஒருவராகச் சிதம்பரம் பிள்ளை இருக்கட்டும் என்றார் ஆச்சாரியார், அதாவது உபதலைவர் ஸ்தானத்தைஉப்புச்சப்பற்றதாக்கிவிடும் சூழ்ச்சி செய்தார். பார்ப்பனரல்லாதார் சார்பிலே, பெரியாரும் வரதராஜுலு அவர்களும் வாதாடிவெற்றிபெற்றனர்.தோற்ற ஆச்சாரியார் துயருடன், "உங்களைவிட ஜஸ்டிஸ்கட்சியார் 100மடங்கு தேவலாம்" என்று கூறினர்.

1920ல், திருநெல்வேலியில்மாகாணமாநாடு. ஜஸ்டிஸ் கட்சியார் வகுப்புவாரிப் பிரதிநிதித்வக்கொள்கைக்காகப் போரிடுவதால், அந்தக் கொள்கை நியாயமானது, ஆகையால், பார்ப்பனரல்லாதார் அதை ஆதரிக்கிறார்கள், ஆகவே காங்கிரசைப்பலப்படுத்தவும், காங்கிரசிலே பார்ப்பனரல்லாதார் சமுதாயத்தைச்சேர்க்கவும், அந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்வக் கொள்கையைக் காங்கிரசில் நிறைவேற்றிட வேண்டும் என்பதுபெரியார்கட்சி. இதனை, 1919ல், முதன்முறையாகப் பெரியார் திருச்சியில் நடைபெற்ற தமிழ் மாகாணக்காங்கிரஸ் மாநாட்டின்போதே, ஆச்சாரியாருடன் பேசி, அவருடைய சம்மதத்தையும் பெற்று வைத்திருந்தார். திருநெல்வேலியில் கூடிய தமிழ் மாகாணக் காங்கிரசில் இதேவகுப்புவாரித்தீர்மானத்தைப் பெரியாரும் தோழர் சிதம்பரம்பிள்ளையும்கொண்டுவந்து, விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றி, மாநாட்டிலே கொண்டுபோனார்கள். மாநாட்டுத் தலைவர், மயிலை சீனுவாசஐயங்கார். தலைவர் தமது அதிகாரத்தைக் கொண்டு,தீர்மானத்தைநிராகரித்துவிட்டார். காமராஜர்கள்குமுறினர்.

1921ல், தஞ்சையில் நடைபெற்றது, மாநாடு. அப்போது, பெரியார், வகுப்புவாரித் தீர்மானம் கொண்டுவர ஏற்பாடு செய்ய, பார்ப்பனத் தலைவர்கள்கூடி, காங்கிரஸ் ஸ்தாபனம் உட்படச் சகல இடங்களிலும், பார்ப்பனரல்லாதாருக்கு நீதியும் பாதுகாப்பும் இருக்கும்படி செய்வதாகக்கூறி, தீர்மானத்தை நழுவவிடச்செய்தனர்.

1922ல், திருப்பூரில் மாநாடு. தென்னாட்டுத் திலகர் என்று பெயரெடுத்துப் பிரகாசித்துவந்த டாக்டர் வரதராஜுலு,அதற்குத்தலைமை வகிக்க, மாகாணமெங்கும் ஆதரவு இருந்தும், பார்ப்பனப் பத்திரிகைகள் — குறிப்பாக மித்திரன் — சூழ்ச்சி செய்து, வாசுதேவராவ் என்ற ஐயரைத் தலைவராக்கினர். அந்த மாநாட்டிலே, பார்ப்பனர்—அல்லாதார் தகராறு பலமாகி, கைகலக்கும் நிலைமைவரை வளர்ந்தது. அந்த மாநாட்டிலே, ஜாதிவித்யாசத்தைக்கண்டித்துப் பேசினார் பெரியார். இராமாயணம் கொளுத்தப்படவேண்டும் என்று பேசியதும் அங்குதான்.

பிறகு திருச்சியில், மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக்கூட்டம் நடை

அடுத்த பக்கம் பார்க்க

## காமராஜர் சம்பவம்

5-ம் பக்கத் தொடர்ச்சி

பெற்று, அதிலே பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். உடனே பார்ப்பனர்கள், பெரியார் தலைவராக இருக்கக்கூடாதுஎன்று கூறிப் படைதிரட்டினர். வ. வே. சு. ஐயர், பெரியார்மீது அதே போது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்தார். தோழர் கலியாணசுந்தரனார், இந்தத்தீர்மானம், பார்ப்பனர் — பார்ப்பனரல்லாதார் துவேஷத்தால் பிறக்கிறது, இதகூடாத. இப்படித்தீர்மானம் வருமானல், பிறகு, காங்கிரசிடம் நம்பிக்கையில்லை என்று பார்ப்பனரல்லாதார் தீர்மானம் நிறைவேற்ற வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்தார். தீர்மானம் கொண்டு வரப்பட்டது, பார்ப்பனர் படு தோல்வி அடைந்தனர்.

1923ல், திருவண்ணமலையில் தமிழ்மாகாணக்காங்கிரஸ் மாநாடு, பெரியார் தலைமையில் நடைபெற்றது. தலைமை உரையில், பார்ப்பனரல்லாதார் விஷயமாகப் பல உண்மைகள் இருந்தன. பார்ப்பனர்—பார்ப்பனரல்லாதார் போரிலே, பார்ப்பனரல்லாதார் கரமே உயர்ந்தது. ஆனல் மயிலை ஐயங்கார், அந்தப்படை வரிசையைக் குலைத்தார். பணத்தை வீசினர். படையில் பிளவு உண்டாக்கினர். காஞ்சியில் அவர்கரம் வலுத்தது. காமராஜர்கள் அன்று அங்கு இருந்தனர். பெரியார் இனிக்காமராஜராக இருக்க வேண்டியதில்லை, பார்ப்பனர்கள் காங்கிரசைக்கொண்டு நடத்தும் கபட நாடகத்தை வெளியாக்குவேன், என்று வெளியே கிளம்பினர், தோழர்கள் சுப்பிரமணிய நைனர், ஜனப்தங்கமீரான், சீயாழி சாமிநாதச் செட்டியார், அய்யாமுத்து, கோவை சுப்பையா, மாயவரம் சுப்பிரமணியபிள்ளை, எஸ். இராமநாதன், தண்டபாணிப்பிள்ளை, எஸ். வி. லிங்கம், போன்றவர்கள் பின்தொடர. இன்று பெரியாரின் படையிலே ஆயிரக்கணக்கானவர்கள் உள்ளனர், காரணம், அந்த உறுதி, அஞ்சாநெஞ்சு, தமிழுரம்!

★

1927ல் சென்னை கோகலேமண்டபத்தில், தமிழ் மாகாணக்காங்கிரஸ் மாநாடு. இதற்குத் தஞ்சைத் தோழர் மருதவாணம்பிள்ளை அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனல், அந்தச் சிறுகூட்டத்தின் சக்தியால், அவர் ராஜிநாமா செய்யும்படி செய்யப்பட்டு, தோழர் கே. வி. ரங்கசாமி ஐயங்கார் தலைமை வகித்தார்.

1929ல் வேதாரண்யத்தில் மாநாடு. குமுறல். ஏராளம். தலைமை வகிக்கச்சர்தார்படேல் அழைக்கப்பட்டிருந்தார். அவரை வரவேண்டாம் என்று ஏராளமானதந்திகள், மயிலைக்கோஷ்டி அனுப்பிற்று. மாநாடு நடைபெருது தடுக்க எவ்வளவோ சூழ்ச்சிகள். ஆனல்பலிக்கவில்லை. படேல் தலைமை வகித்தார். அந்தமாநாட்டிலே, மயிலைஐயங்கார் மீது நம்பிக்கை இல்லாத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. பார்ப்பனர்கள் மிகப்பிரயத்தனப்பட்டு. அதை வாபீஸ் வாங்கவைத்தனர். தோழர் முத்துரங்கமுதலியார், தமிழ்மாகாணக்காங்கிரஸ்கட்டித்தலைவரானர். ஆனல் அந்த வருஷம் பூர்த்தியாகு முன்பே, ஆச்சாரியார் மாகாணக் காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவரானர். இடையே, பார்ப்பனர்கள் தமது 'வேலையை'விடாது செய்து வந்தனர்.

1930ல், மதுரையில் 34-வது மாநாடுகூடிற்று. இதிலேருக்மணி லட்சுமிபதி அம்மையார்தலைமைவகிக்க வேண்டும் என்பது தமிழர் கட்சி, பார்ப்பனர்கள், சத்யமூர்த்தி அவர்களைத் தலைவராக்க விரும்பினர். போட்டிகடுமை, குமுறல்ஏராளம். தோழர் சத்யமூர்த்தி ஓட்டு அதிகம் பெற்றுத்தலைவரானர். அந்தஓட்டும், திருச்செங்கோடுசம்பவம்போன்றதே! ஒருஜில்லாக்கமிட்டி, முறைப்படி தேர்தலோ, கூட்டமோ நடத்தாமலேயே, தோழர்சத்யமூர்த்திக்கு 'ஓட்' தருவதாக, ஏதேச்சாதிகாரமாகக்கூறி, ஐயரை ஆசனம் ஏறச் செய்தது. அடுத்த மாநாடுசத்யாக்ரகம்காரணமாக, முறைப்படிநடைபெறவில்லை.

36-வது மாநாடு, ஆச்சாரியார் தலைமையில் கோவையில் நடந்தது. உபதலைவருக்குப் போட்டி, தோழர் சத்யமூர்த்திக்கும், சர்தார் வேதரத்தினம் அவர்கட்கும் இடையே. மூன்றுமுறை ஓட்டுக்குவிடப்பட்டு, முப்புரி பலமாக வேலை செய்தும், மூன்று முறையும் சர்தார் வேதரத்தினம் வெற்றி பெற்றர். தமிழன் தன் வீரத்தைக்காட்டி, ஆற்றலை நிரூபித்ததோடு நிற்கவில்லை, பெருந்தன்மையைக் காட்ட வேண்டிக், கிடைத்த பதவியை ராஜிநாமா செய்துவிடவே, சத்யமூர்த்தி அவர்கள் உபதலைவராக அமர்ந்தார்-மும்முறை தோற்றபிறகு!

பிறகு நடந்தது காரைக்குடி! காமராஜர், ஸ்தானம், அன்று தோழர் முத்துரங்கமுதலியாருக்கு. முதலியாருக்குத், தமிழரின் ஆதரவுபரிபூரணமாக இருந்தது. இருந்து! சத்தியமூர்த்தியாரைத் தலைவராக்க, ஆச்சாரியார் துணிந்து, போர்தொடுத்துவிட்டார். தந்திகள் பறந்தன! தூதுகள் கிளம்பின. சத்தியமூர்த்தியாரின் பொதுவாழ்க்கை, சொந்த வாழ்க்கை ஆகியவற்றிலே இதற்கு முன்பு, குறைகண்ட ஆச்சாரியார், இனப்பற்றுக்காக இவ்வளவையும் மறந்து, இராத்தூக்கம் பகல்தூக்கமின்றி வேலை செய்தார். சூழ்ச்சி கெலித்தது. முத்துரங்கமுதலியார் தோற்றர். சத்தியமூர்த்தியார் ஜெயித்தார். இன்று தமிழகத்தில் இருப்பதுபோல அன்றும்கொதிப்பு, கண்டனம். ஆச்சாரியார் அவைகளைச்சட்டைசெய்யவில்லை. காரியம் பெரிது, வீரியம்அல்ல, என்றமுறையிலே, "நாலுநாள் வாய் வலிக்கப் பேசுவார்கள். பேசட்டும் நமக்கென்ன? நாயக்கர் போலவிடாப்பிடியாகஎதிர்க்கஇவர்களால்ஆகாது' என்று எண்ணிக்கொண்டு, மூர்த்திக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்துவிட்டு, முப்புரியை உருவியபடி, தமிழரைஅலட்சியமாகப், புன்சிரிப்புடன் பார்த்தார். சின்னட்களிலே, சீறிப்போரிட்டவர்களெல்லாம், ஆச்சாரியார் திருவடிகளே சரணம் என்று கூறிவிட்டனர். ஏன்? ஆச்சாரியார், வடநாட்டுத் தலைவர்கள் தனக்குப்பக்கபலமாக இருப்பதைக்காட்டினர். பார்ப்பன ஏடுகள் அவர்களுக்குப்பலம் தேடின. ஆச்சாரியார், காரைக்குடியிலே, கண்கசியும் காமராஜரைக் கண்டார், இன்றும் காண்கிறர்! கொதிப்பு இன்று இருப்பதுபோல அன்று இருந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக, ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுக்காட்டுகிறேம். ஆச்சாரியாரின் காரைக்குடி நடவடிக்கையைப்பற்றிக்கண்டித்து அந்நாளில் திருவாரூர் காங்கிரஸ் தோழர் டி. எஸ். தியாகராஜ ஞானியார் என்பவர்,

"சமீபத்தில் காரைக்குடியில் நடைபெற்ற அரசியல் மாநாட்டின் போக்கையும் அங்கு விஜயம் செய்திருந்த தோழர் ராஜகோபாலாச்சாரி போன்ற பிராமணர்கள், பிராமணருக்குத் தலைவர் பதவியைப்பெறச் செய்தசூழ்ச்சிகளையும், உடல்பொருள் ஆவி மூன்றினையும் காங்கிரஸ் கட்டளைக்காகத்துறந்த அரும் பெரும் தியாகியான பிராமணரல்லாத காங்கிரஸ்வாதி தோழர் முத்துரங்கமுதலியார் தலைவர் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதையும் அறிந்துகொண்டபின்னரும், நாம் சும்மா இருப்போமானல் வருங்காலத்தில் அரசியல் துறையிலாகட்டும் வேறு எத்துறையிலாகட்டும் பிராமணரல்லாதாருக்கு எந்த உயர் பதவியையும் கொடுக்கவோ அல்லது நாமே பெறவோ காங்கிரஸ் பிராமணர்கள் சம்மதிக்கமாட்டார்கள் என்பதும், மனம்பொறுக்க மாட்டார்கள் என்பதும் வெட்டவெளிச்சமாகிவிட்டது. நாமே பதவிகளைப் பெறுவதற்கும் இடையூறுகள் பல செய்து மறைமுகமான சூழ்ச்சிகளாலே முட்டுக்கட்டைபோடுவார்கள் என்பது நிச்சயம்." என்றுஎழுதினர்.

தியாகராஜ ஞானியார், எழுதியது, காரைக்குடி சம்பவத்தின் போது, பத்து ஆண்டுகளுக்கு முன்பு, ஏறக்குறைய மாதம்நாள் கூட அதே அளவினதாக இருக்கும். 1936, பிப்ரவரி 9-ந்தேதி அவர் எழுதினர். 1946 பிப்ரவரியிலும், அவர்போன்றவர்கள், நாள்தோறும், கலம் கலமாக எழுதுகிறர்கள், கலக்கத்தோடு, கோபத்தோடு! இன்னும் எத்தனை காலம் இதுபோல எழுதிக்கொண்டிருப்பரோ, தெரியவில்லை!! காமராஜர் சிந்தும் கண்ணீர், இன்று நேற்று, ஏற்பட்ட இன்னலின் காரணமாக அல்ல. ஆரியரின் ஆதிக்கத்தை, எங்கு, யார், எதிர்த்தாலும், அவர்கள், எதிர்க்கும் காமராஜர்களைக் கண்ணீர் விடத்தான்செய்வார்கள். ஏனெனில், தொழுது நிற்கும் அடியவர்கள் அழுது குறைகூறித்தீர வேண்டுமே தவிர, எதிர்த்து நீதி கேட்கவோ, போரிட்டு அக்ரமத்தை அழிக்கவோ முடியாது என்பது ஆரியருக்குத் தெரியும். மேலும், 'பக்தரின்' கோபம், நெடுநாளைக்கு நில்லாது. ஏதேனும் ஒரு துளி, திருப்திதரும் விஷயம் காட்டப்பட்டால், ஒரு சிறு புன்னகை, காட்டினல் இரண்டொரு இன்மொழி சொன்னல் போதும், கண்ணீர் நின்று விடும், பழையபடி கைகூப்பித் தொழுவர் என்பதுஆச்சாரியாருக்கும் அவருடைய இனத்தவருக்கும் நன்கு தெரியும். காமராஜரைச் சாந்தப்படுத்த என்ன வழி என்பதை இன்னேரம், கண்டுபிடித்து விட்டிருப்பார், திட்டப்படி காரியமாற்றவும் தொடங்கிவிட்டிருக்கக் கூடும். விரைவிலே காமராஜர், கண்களைத் துடைத்துக்கொண்டு, உலவவும் காணலாம், ஆனல், தன்மானத்தைத் தளரவிடமறுக்கும் எந்தத் தமிழனும், காமராஜர் அடைந்த கதியை எண்ணும்போது, கண்களிலே கனல்கிளம்பாமற் போகாது.!! "காமராஜர் சம்பவம்" கிளப்பிய கொதிப்பைக் கண்டு, நாம் ஏமாறவில்லை, இந்தக்கொதிப்புநிலைக்குமென்றுநம்பிக் கொள்முதல் சரக்கு என்று எண்ணவுமில்லை. ஆரிய திராவிடப் போராட்டக் காதையிலே இது ஒரு கட்டம், என்ற முறையிலேயே இதைக் கவனிக்கிறேம். ஆள்பிடிக்கும் வேலைக்காக அல்ல!!

காமராஜர் சம்பவம், ஆரியர், திராவிடரை அடக்கும் துயரம் மிக்க தொடர் கதையில் ஒரு பகுதி. தொழுது நிற்பவர்கள் அழுதுதீர்ப்பர், அழுது ஓய்வர் என்பதும்நமக்குத் தெரியும். ஆனல், இந்தத் தொடர்கதையில் இறுதி அத்யாயம் எழுதப்போவது திராவிடனே! அவனுக்குத் தெரியும், அந்த இறுதி அத்யாயம் என்ன என்பது! அந்த அத்யாயத்தின் தலைப்பு, திராவிட நாடு திராவிடருக்கே என்பதாகும்!

## மல்லிகை முல்லை பிறகு

3-ம் பக்கத் தொடர்ச்சி

கள் போன்றவைகளைப் புசிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். இவைகளை வெளிநாடு இங்கு அனுப்ப முடியும், நகரவாசிகளும் விலைகொடுத்து வாங்கமுடியும், கிராமவாசியால் முடியாது. ஆகவே ஏழைக்கிராமவாசியிடம்அவன்வாங்கி உபயோகிக்கக்கூடிய அரிசியைத் தாராளமாகத்தந்துவிட்டு, நகரவாசிகள், வேறுவகை உணவுகளை உட்கொள்ள முன்வரவேண்டும், ஏனெனில் உழைப்பாளிகள் கிராமங்களிலேதான் உள்ளனர்; அவர்களின் நிலைமை மோசமாகிவிட்டால், ஏர் பிடிக்கும் திறமையோ சக்தியோ அற்றநகரவாசியால், மாத மும்மாரி பொழிந்தாலும் விவசாயத்தைச் செய்து நாட்டைக் காப்பாற்றமுடியாது. ஆகவே பஞ்சம் கிராமங்களைத்தாக்காதபடிபார்த்துக்கொள்வதே, முதல்வேலை, முக்கியகடமையாக இருக்கவேண்டும். வீடுகள், பங்களாக்கள், கோயில் தோட்டங்கள், பொழுது போக்கு நந்தவனங்கள் என்பனவெல்லாம் உடனடியாக, ஏதாவது ஒருவகை புஞ்சைப்பயிர் வைத்தாகவேண்டும். இந்தச்சமயத்தில் வள்ளியும், முள்ளங்கியும், கீரையும், தண்டும், வேறு பலகிழங்கு வகைகளும். ஏராளமாக எங்கும் பயிரிடப்பட வேண்டும், சாதாரண மக்களால், அதிக சிரமம் இல்லாத முறையிலே, அதிகமான நீர்ப்பாசனம்தேவைப்படாத விதமான பயிர்வகைகள், உடனே ஆரம்பிக்கப்படவேண்டும். மக்கள் பஞ்சத்தின் பிடியிலே சிக்காமல் இருக்கவேண்டுமானல், சர்க்கார் இதற்கான வழிபற்றிப் பேசுவதுடனே திட்டம் தீட்டுவதுடனே இராமல், ஒவ்வொரு வீட்டாரும் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை உணர்ந்து, அதற்குஆவன செய்வதற்கு முன் வருவதற்குத் தூண்டவேண்டும். மல்லியும் முல்லையும் மணமுள்ள ரோஜாவும், மணமில்லா மலர்கள் பலவும் தோட்டங்களிலே, பஞ்சம் ஒழியும்வரை, இருப்பது, நாட்டிலே பிணவாடையை உண்டாக்கும் தீயசெயலுக்கு உடந்தையாக இருக்கும் குற்றமாகும் என்பது மக்கள் மனதிலே பதியும்படி செய்யப்படவேண்டும். இந்தக் காரியத்தைச் சர்க்கார் நியமிக்கும் ஒருபிரசார ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பது, அமுல் நடத்தும் செயலாகும், உருவானபலன் இராது. ஒவ்வோர் ஊரிலும், எல்லாக் கட்சிகளையும் கொண்டகமிட்டி அமைக்கப்பட்டு, அந்தக் கமிட்டியினிடம், இந்தப் பிரச்சாரப்பொறுப்பும், பொதுமக்களிடம் தொடர்பு வைத்து, அவ்வப்போது தக்கயோசனை கூறும் பொறுப்பும் தரப்பட வேண்டும். தக்காளி பயிரிடவேண்டும் என்று தாசில்தார் கூறுவது, யோசனை என்றே யுக்தம் என்றே மக்கள் கருதுவதில்லை, சர்க்காரின் உத்தரவு என்று பயத்தோடுதான் அதனைக் கேட்பர், ஆனல் ஊரார்நியமிக்கும் கமிட்டியினர் கூறினல், அதனைஉவகையுடன் கேட்கவும், யோசனைகளைப்பற்றிச் சிந்திக்கவும், நடந்துகொள்ளவும் தயாராவர். பொதுமக்களின் பிரச்னையைப் பொதுமக்களின் பிரதிநிதிகள்கொண்ட கமிட்டியேபுரியும்படிவிளக்கமுடியும்என்பதைச் சர்க்கார் உணரவேண்டும்.

உடனே ஊரெங்கும், சகலகட்சியினரும்கூடிக்கலந்துபேசி, உணவுக் கழகம் அமைக்கவேண்டும். இதன் மூலமாகத்தான், நெருக்கடியைச் சமாளிக்கமுடியும். உணவு முதலில் பிறகே ஊர் ஆள்முறைபற்றிய விவாதம் என்பதை மறக்கலாகாது—



உறையூர்
எஸ். எம். எஸ். ஆர். பி.

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.


## 'தேடியது, வக்கீலை!'

2-ம் பக்கத் தொடர்ச்சி

மும் ஜடாதரனுக்குத் தெரியும். சொக்கலிங்கம், ஜடாதரனுக்குச் செய்தி அனுப்பி விட்டார், கருணை கட்டாயமாக இருதயநாதனை மணம் செய்துகொள்ள 'உத்தரவு' தராதே என்று. ஜடாதரர் உத்தரவு கிடைக்காததால், பெண் தரமுடியாது என்று எல்லப்ப முதலியார் சொல்லிவிட்டார். என்ன செய்வேன்! ஜடாதரரின் சம்மதம் கிடைக்காததால் தான், எல்லப்பர் திருமணத்துக்குச் சம்மதிக்கவில்லை என்ற சூக்ஷமத்தை கருணை தெரிவித்தாள். அவளுக்கும் அதுவரையில்தான் தெரியும், சொக்கலிங்கமே சொரூபானந்த ஸ்வாமியாக நாடகம் நடத்தி வந்தது. ஜோதியின் கற்பழித்தது, அதன்விளைவாகத் தான் பிறந்தது, எல்லப்பருக்கு வளர்ப்புப்பெண்ணானது இவைகள் கருணைவுக்குத் தெரியாது. எனக்கும் அப்போது தெரியாது. ஜடாதரனிடம் சம்மதம் பெறுததால்தான். கருணையை எனக்கு மணம் செய்விக்க மறுக்கிறார் என்று தெரிந்ததும், நான் நேரே, எங்கள் ஊர் சென்றேன், ஜடாதரரைக் கண்டேன், முறையிட்டேன். அவர் முதலிலே, 'உத்தரவு' கிடைக்க வில்லை, 'பொருத்தம் இல்லை' என்று ஏதேதோ சாக்குச் சொன்னார். நான் விடுவதாக இல்லை. பிறகு, அவருக்கு என்னமோ என் மீது இரக்கம் பிறந்தது, "கருணையை நீ பெறவேண்டுமென்றால், வைரவியாபாரம் சொக்கலிங்கச் செட்டியாருடைய சம்மதத்தைப் பெற்றுவா. உனக்குக் கருணை மீதுள்ள காதலையும் அவளுடைய சம்மதத்தையும் எடுத்துக்கூறி, அவரை வேண்டிக்கொள். அவர் சம்மதித்தால், உன் கலியாணத்தை நான் முடித்து வைக்கிறேன்" என்றான் அந்தச் சன்யாசி வேடக்காரன். "கருணைவுக்கும் சொக்கலிங்கம் செட்டியாருக்கும் என்ன சம்பந்தம்? யார் வீட்டுப் பெண்ணுக்கு யாரிடம் போய்ச் சம்மதம் தரும்படியாகக் கேட்பது" என்று நான் திகைப்புடன் கேட்டேன். அப்போது தான், ஜடாதரன், பூராவிவரத்தையும் என்னிடம் சொன்னான். புரட்டின்மேல் புரட்டுச்செய்து கொண்டு பூஜாமடங்களிலே அமர்ந்துள்ள இந்தப்பொய்யர்களைக்கூண்டோடு தொலைக்க வேண்டும் என்று எனக்கு ஆத்திரம் பிறந்தது. ஆனால், என் மனமெல்லாம் கருணை மீது இருந்ததால், புரட்டர்களைப் பிறகு ஒழிப்போம், முதலிலே, சொக்கலிங்கம் செட்டியாரின் சம்மதத்தைப் பெறுவோம் என்று எண்ணி, அவரைப் பலமுறை கண்டு, எனக்கு அவருடைய சூது அவ்வளவும் தெரியும் என்பதையும் கூறி, கருணையை, எனக்கு மணம் முடித்துவைக்கும்படி கேட்டேன், எச்சரித்தேன். செட்டியார் மசிய மறுத்தார். ஜடாதரன் ஒரு முட்டாள், உன்னிடம் இரகசியத்தைக் கொட்டி விட்டான், ஆனால் அந்த இரகசியம் உனக்குத் தெரிந்ததால், என்னை ஆட்டிப் படைக்கலாம் என்று கனவு காணாதே, அசைக்கக்கூடமுடியாது! கருணையை, உனக்குத்தரமுடியாது. நீ ஒரு கிருஸ்தவன், என்ன தைரியம் உனக்கு, கருணையைக் கலியாணம் செய்துவைஎன்றுகேட்க" என்பதாகக்கூறி என்னை ஏசினார். பல முறை கெஞ்சினேன், சில சமயம் மிரட்டியும் பார்த்தேன். "சொக்கலிங்கமே சொரூபானந்தன்; சொரூபானந்தருக்கும் ஜோதிக்கும் பிறந்தவளே கருணை; இவைகளெல்லாம் உண்மைதான். ஆனால் இவை உண்மை என்று எப்படி ருஜுப்படுத்துவாய்?" என்று என்னைக்கேட்டான் அந்தக்கள்ளன். "ஏன் ஜடாதரனின் சாட்சி இல்லையோ"? என்று நான் சொன்னேன், "என்னுடன் சகலத்திலும் பங்கு கொண்டவனும், என் உதவியால் இன்று 'குரு'வாகக் கோலம் கொண்டிருப்பவனுமான, ஜடாதரன் உனக்குச் சாட்சியாகவா வருவான்! பைத்யக்காரா! வருவானா? என் கூட்டாளி, பங்காளி! அவன் எனக்கு எதிரியாவானா? ஆனால் அவன் கதி என்ன வாகும்? அன்று உன்னிடம் ஏதோ சொல்லிவிட்டான் பழைய நாள் சம்பவங்களை. போதையாக இருந்திருப்பான். இப்போது போய்ச்சாட்சியாக வரவேண்டும் என்று கூப்பிட்டுப்பார்" என்றார் உங்கள் செட்டியார். ஜடாதரன், அது போலவே, நான் போய்க் கேட்டபோது, "நான் என்ன பைத்தியக்காரனா?" என்று சொல்லி அனுப்பி விட்டான். இன்று கடைசி முறையாகச் சொரூபானந்த வேடமிட்ட சொக்கலிங்கத்தைக் கேட்டு விட்டேன், முடியாது என்று கூறி விட்டான். இதுதான்என்கதை.எனக்குஎன்ன உபகாரம் தேவைஎன்றால், எப்படியாவது, சொக்கலிங்கமே சொரூபானந்தஸ்வாமி என்பதைக்காட்டுவதற்கான ஆதாரம் தேவை. ஜடாதரன் எழுதிய கடிதங்கள் ஏதேனும் கிடைக்குமானால், நமதுநாட்டைக் கெடுக்கும் இந்த நயவஞ்சகர்களின் நாடகம் வெளிப்படும், மக்கள் தப்புவார்கள்." என்றுகூறி, என்னை வேண்டிக்கொண்டான். நான், எப்படிஎப்படியோ முயற்சி செய்துபார்த்தேன், ஒரு கடிதம் கூடக் கிடைக்கவில்லை. இருதயநாதன், கருணையைக்கூட மறந்தான், காவி உடைக்கள்ளர்களை வெளிப்படுத்த வேண்டும் என்று துடிதுடித்தான். இன்று காலை முதல், பல வக்கீல் வீடுகளுக்கு இருவருமாகப் போனோம். அதாவது என்னை அழைத்துக்கொண்டு போனான். எந்தவக்கீலிடம் சொன்னாலும், "நான்சென்ஸ்! ஆதாரம் என்ன? ருஜு எங்கே? சாட்சி யார்!" என்று தான் கேட்டார்கள். சில வக்கீல்கள், "பிரபலவியாபாரி அவர், அவர்மீது, ஆள்மாராட்டக்குற்றம் சுமத்துவது, எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா, ருஜுவே இல்லாத விஷயம், எவனோ ஜடாதரன் சொன்னான் என்கிறாய், அவனே சாட்சியும் வரமாட்டான் என்கிறாய், கோர்ட்டிலே எழுந்து நின்று எந்தக் கோமாளியும் இப்படி ஒரு விசித்திரமானவழக்குக்கு வாதாடமுன் வருவானா? மானநஷ்டவழக்குத்தொடருவார்செட்டியார்" என்று இருதயநாதனையே மிரட்டியும் அனுப்பினார்கள். இருதய நாதன் கூறும் வழக்கு என்ன தெரியுமோ? தெளிவாக இருக்கும்.

வைரவியாபாரம் செய்யும்சொக்கலிங்கம்செட்டி, இருபது ஆண்டுகளுக்குமுன்பு, சாமியார் வேஷம் போட்டுக் கொண்டு, சொரூபானந்தசாமி என்ற பெயரிட்டுக் கொண்டு, திருநெல்வேலிப்பக்கத்திலே, பாமரமக்களை ஏய்த்துப் பணம்பறித்து வந்தான்.

அதுசமயம்,ஜோதிஎனும்விதவையைக் கற்பழித்தான்; ஒரு பெண் குழந்தை பிறந்தது. ஜோதிஇறந்துவிடவே, குழந்தையைப்,பக்தியால் ஏமாந்த எல்லப்ப முதலியாருக்கு 'தத்து' ஆக்கினான்.

ஆகவே சொக்கலிங்கம்செட்டியார் ஒரு புரட்டன், காமுகன், காவி வேடத்திலே உலாவிய கள்ளன், கற்பழித்தவன்.அவனுடைய 'சொத்து,' மதவேஷமிட்டு ஊரை ஏய்த்துப் பொருள் பறித்ததன் விளைவு.

இவனுடைய புரட்டு முழுவதும் இவனுக்கு உடந்தையாகஇருந்து பிரதம சீடனாகவும் இருந்து இப்போது 'குருஸ்தானம்' வகிக்கும் குடிகாரன் ஜடாதரன் என்றசடையனுக்குத் தெரியும்.

காருண்யமிகுந்தசர்க்கார்,இந்த வழக்கை விசாரித்து, ஜடாதரனை உண்மையைக் கூறும்படி செய்து காவிபூண்டு உலவும் கள்ளரின் புரட்டை உலகு அறியச்செய்து, ஏழை மக்கள் இவ்விதமான எத்தர்களுக்கு இரையாகாதிருக்கும்படி பாதுகாத்தருள வேண்டும்.

இதுதான் இருதயநாதன் தொடுக்கவிரும்பும் வழக்கு. இதைநடத்திக் கொடுக்கும்படியாகத்தான் இன்று பகல் பொழுது முழுவதும், எத்தனையோ வக்கீல் வீடுகள் ஏறி இறங்கினோம். அவ்வளவு பேரும், சிரிக்கிறார்கள்; ருஜு,சாட்சி, ஆதாரம், எடுஎன்று கேட்கிறார்கள்! ஒரு வக்கீல் சபித்தே விட்டார்.

"அடே மஹாபாபி! சொரூபானந்தரையா இப்படித் தூஷிக்கிறாய்? நான் அவரைத் தரிசித்து இருக்கிறேன். உனக்கு என்னடா தெரியும் ஞானிகளின் குணம்." என்று இடித்துரைத்தார். புரட்டு நடத்திய சொக்கலிங்கம் செட்டியும் ஒப்புக்கொள்கிறான், உடந்தையாக இருந்த சடையனும் ஒப்புக்கொள்கிறான், இருதயநாதனிடம் பேசும்போது! ஊர் ஒப்புக்கொள்ளாதே! கோர்ட்டிலே கேஸ் நிற்காதே! சொரூபானந்த ஸ்வாமிகள், ஜோதியில் கலந்ததற்கு ஆதாரம் இருக்கிறது! அந்தச் சமயத்திலே, பிரசங்கம்செய்தவர்களிலே, இந்த ஊர் நீதிபதியும் ஒருவராம்! இந்த நிலையிலே, இருதயநாதன் எப்படி வழக்குத் தொடுக்க முடியும்? வக்கீலுக்காகத் தேடித்தேடி அலைந்து, ஆத்திரம் அதிகமாகிவிட்டது இருதயநாதனுக்கு. நேரே, என்னை அழைத்துக் கொண்டு, கருணை வீட்டுக்குப் போனான். அங்கே, எல்லப்ப முதலியார் எதிரிலேயே,முழுக்கதையையும் கொட்டினான். "இப்படிப்பட்ட பைத்யக்காரனைக்கலியாணம்செய்துகொள்கிறேன் என்று சொன்னாயே, பாரம்மா, கருணை! பார் இந்தப் பித்தனை" என்று எல்லப்ப முதலியார் கூறினார். கோபம் தலைக்கேறிவிட்டது இருதயநாதனுக்கு. எல்லப்ப முதலியாரைத் தாக்கினான். அவ்வளவுதான், அவருடையவேலையாட்கள்கூடி, அடி அடி என்று அடித்தனர், நான் ஓடினேன், அதனால் தப்பினேன். பலமான அடிபட்டுக்கொண்டு, இரத்தம் ஒழுக ஒழுக இருதயநாதன் எல்லப்ப முதலியாரின் பங்களாவை விட்டு வெளியே வந்தான். நான் சென்று, அவனைத் தாங்கியபடி, அழைத்து வந்தேன். வருகிறவழியிலெல்லாம்கூட, "ஒரு நல்ல வக்கீல் மட்டும் கிடைத்து விட்டால், இந்தச்சொக்கலிங்கத்தின் வண்டவாளத்தைஊரறியச்செய்து, பத்து வருஷம் ஜெயிலுக்கு அனுப்பிவைப்பேன்" என்று கூறிக்கொண்டே வந்தான். கம்பவுண்டர் சார்! இதுவே பரிதாபத்துக்குரிய என் நண்பனின் கதை," என்று எம்பெருமான்கூறிமுடித்தார்.

திகைத்துப்போனான் கம்பவுண்டர்.


"ஏன் சார்! உலகிலே இப்படியும் புரட்டுகள் நடக்கின்றனவா?" என்றுயோசிக்கிறீர், என்று கேட்டார் எம்பெருமான்.

"இல்லை, சார், இல்லை! காவி போட்ட கள்ளர்கள்பலபேர் இருக்கிறார்கள். ஒவ்வொருவனுடைய கொடிவழி பட்டியையும் பார்த்தால் இப்படி ஏதாவது ஒருபுரட்டாகத்தான் இருக்கும். ஏமாறுகிற ஆசாமிகள் இருக்கிறவரையிலே, ஏமாற்றுகிறவர்கள் இருந்துதான் தீருவார்கள். நான்அதற்காகஅல்ல யோசித்தது. இருதயநாதன் கூறுவது உண்மையாகத்தான் இருக்கிறது, அவனுக்குச் சொக்கலிங்கத்திடமோ, ஜடையனிடமோ என்ன பகை? பாவம்! ஆனால் இருதயநாதன்கூறும் உண்மையை, கோர்ட் ஏற்றுக்கொள்ளாதே. வழக்குக்கு ஆதாரமே இல்லை, பொய்யாக சோடிக்கப்பட்ட கேஸ் என்று தள்ளிவிடுவதோடு, இருதயநாதன் மீது மானநஷ்ட வழக்குக் கூடத் தொடுத்துவிடுவார்களே என்பதை எண்ணித்தான் திகைத்தேன்" என்றான் கம்பவுண்டர்.

* * *

பொழுது விடிந்தது, இருதயநாதன், கண்விழித்தான், களைப்புடன்

அடுத்த பக்கம் பார்க்க

ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.

ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் தெற்குவீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E. அப்துல் ரகிமான் சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.

# ★ பிலிப்பைன் தீவுகள் ★

பிலிப்பைன் தீவுகள் சுமார் 7,083, இவைகளில் சுமார் 2400 தீவுகளுக்குப் பெயர்களே கிடையாது. இரண்டாவது மகாயுத்தத்தில் பெயர்வழங்கப்பட்டவை க்லூஸான், மிண்டானே,சாமார் நெக்ராஸ்,பால்வான், லேட், கெபுமுதலியதீவுகளாகும்.1939-ம் வருஷக்கணக்குப் படி மொத்த ஜனத்தொகை 16000000. இத்தீவுகள் வடக்கேயும் மேற்கேயும் தென்சீனக்கடலால் சூழப்பட்டிருக்கின்றன. கிழக்கேபரந்த பசிபிக்கடல்.கிழக்கேயுள்ள மணிலா தீவுக்கும் சான் பிரான்சிஸ்கோவுக்கும் இடையில் 7000 மைல்கள் இருக்கின்றன.

பிலிப்பைன் தீவுகளுக்குத் தலைநகரமாக விளங்குவது மணிலா, இந்நகரம் லூஸானில் இருக்கிறது. 1941 ஜனவரியில் இந்நகரத்தில் 6,73,000 மக்கள் வசித்தனர். மணிலா நகரத்திற்கு 27 மைல்தூரத்தில்காரிகிடர் தீவுஇருக்கிறது. மத்திய தரைக்கடலின்முனையில் ஜிப்ரால்டர் எவ்வாறு அரணாக விளங்குகிறதோ அதேபோல் காரிகிடரும் அரணாகவே விளங்குகிறது. இராணுவக் கோட்டைகள் அங்கிருக்கின்றன. பிலிப்பைன்தீவுகள் எல்லாம் அநேகமாக மலைப்பிரதேசம் என்றே சொல்லலாம். அங்குபெரு நதிகள் அதிகம் இல்லை.

பிலிப்பைன் நாட்டு மக்களின் தேசிய மொழி டாகலாக்என்பது. யுத்தத்திற்கு முன் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்திலோ, ஸ்பானியமொழியிலோ பாடங்கள் கற்பிக்கப்பட்டு வந்தாலும் டாகலாக் மொழியும் கற்பிக்கப்பட்டுவந்தது. சர்க்கார் காரியாலயங்களிலும், வர்த்தக நிலயங்களிலும் ஆங்கிலமும், ஸ்பானிஷ் மொழியும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பிலிப்பைன் மக்களில் பெரும்பாலோர் ரோமன் கத்தோலிக்கர்கள், முஸ்லிம்கள் 6-சதவிகிதமிருக்கின்றனர். முஸ்லிம் மதத்தைச்சேர்ந்த மூராக்கள் சூலு பகுதியில் இருக்கின்றனர். அவர்கள் உலோகத்தொழிலிலும் மரவேலைகளிலும் நெசவுத்தொழிலிலும் ஈடுபட்டிருக்கின்றனர்.

## கல்வி

கல்வி தாராளமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது. இத்தீவுகளில் கூட்டுமுறையில் — ஆண்களுக்கும் பெண்களுக்கும் சேர்ந்துக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. 12000 பொதுக்கல்வி நிலயங்கள் மூலமாகவும், 439 சொந்தப்பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் மூலமாகவும்கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது. ஜப்பானியர்களின் ஆக்ரமிப்புக்குமுன் ஆங்கிலமும், பிலிப்பைனின் தேசியமொழியான டாகலாக்கும் பரவியதன் காரணமாக 48-சதவிகிதத்தினர் கல்வி கற்றிருந்தனர். மணிலா சர்வகலாசாலையும் தேசிய சர்வகலாசாலையும், தூரக்கிழக்குக் கல்லூரியும் அமெரிக்க முறையில் உயர்தரக்கல்வி அளித்துவந்தன. ஆரம்பத்தில் ஆசிரியர்கள் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். பின்னால் பிலிப்பைன் மக்களுக்கு அவர்கள் தேசிய மொழியிலே கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்று ஏற்பட்டதும், அமெரிக்க ஆசிரியர்கள் வருகை குறைக்கப்பட்டது. உள்ளவர்கள் சர்க்கார் உத்தியோகத்தில் சேர்க்கப்பட்டார்கள். அமெரிக்கரின் நிர்வாகத்தில் பிலிப்பைன் மக்கள் கல்வித்துறையில் வெகுதூரம் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதே.

## சர்க்கார்

1898ல் நடைபெற்ற ஸ்பானிஷ்—அமெரிக்கா யுத்தத்திற்குப்பின் பிலிப்பைன் தீவுகள் அமெரிக்காவுக்குச் சேர்ந்தன. 1907ல்அமெரிக்கக்காங்கிரஸ்பிலிப்பைன் அசெம்பிளியைக்கூட்டிற்று. பின்னர் காமன்வெல்த் சர்க்கார் 1935ல்நிறுவப்பட்டது. மானுவேல் குயிஸான் அச்சர்க்காரின் தலைவராகத்தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜப்பானியர்கள் முன்னேறவே ஜெனரல் மக்ஆர்தர் தமது தலைமைக் காரியாலயத்தை ஆஸ்டிரேலியாவுக்கு மாற்றிக்கொண்டார். குயிஸானும் அவரது சர்க்காரும் வேறு இடத்திற்குமாற்ற வேண்டியதாயிற்று. 1943 செப்டம்பர் 23ல் உடனே சுதந்திரம் அளிக்கவேண்டுமென்ற மசோதாநிறைவேற்றப்பட்டது. தலைவர் மானுவேல் குயிஸான் 1944 ஆகஸ்டு 1ம் தேதி மறைந்தார். அவருக்குப்பிறகு அவரது இடத்திற்கு முதிர்ந்த தேசியவாதியான சர்ஜியோ ஓஸ்மேனு என்பவர் வந்தார்.

## வாழ்க்கை

பிலிப்பைன் தீவுகளில்உள்ளமக்களின் முக்கிய வாழ்க்கைவிவசாயமே. உலகிலே சிறந்த விவசாயிகளைப் பிலிப்பைனில் தான் காணலாம். விவசாயத்தில் அவர்கள் கையாளும்முறை நவீனமக்களுக்குச் சற்று வேடிக்கையாகவே காணப்படும் என்றாலும், அம்முறையைக்கொண்டும் பழங்காலத்து ஆயுதங்களைக் கொண்டும் பெறுகிறபலன் எவருக்கும் பெரும் ஆச்சரியத்தையே விளைவிக்கும். அவர்கள் தங்கள் நாட்டு நிலத்தின் பண்பை நன்கு அறிந்து, அதை எவ்வாறு திருத்துவதென்பதையும், உணர்ந்திருக்கிறார்கள், அவர்கள் ஏற்றுமதி செய்யும் விவசாயப் பொருள்களில் அரிசி, தேங்காய், கயிறு, சர்க்கரை ஆகியவை முக்கியமானவை. சர்க்கரை உற்பத்தியில்இத்தீவுகள் 5வது வரிசையிலிருக்கின்றன. பலவகையான மரங்கள் உற்பத்தியாகின்றன. கயிறு இங்கிருந்துதான் பெரும்பாலும் உலகிற்குச் சப்ளை ஆகிறது.

தென்னிந்தியாவில் தென்னைமரங்கள் பலன் தருவதுபோலவே, பிலிப்பைன் மக்களுக்கும் தென்னைமரங்கள்பெரிதும் பயனுள்ளவைகளாக இருக்கின்றன .தங்களுடைய சொந்த உபயோகத்திற்கும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிக்கும் தென்னைமரங்களை வளர்த்து வருகிறார்கள். இங்குள்ள விவசாயப் பொருள்களையும், மக்கள் பழக்க வழக்கங்களையும்பார்த்தால் இலங்கைக்கும் தென்னிந்தியாவிற்கும் சம்பந்தமிருந்திருக்கிறது என்பதுதெரிய வருகிறது. தூரக்கிழக்குத்தீவுகளும்தென்னிந்தியாவும் ஒருகாலத்தில் ஒன்றசேர்ந்திருந்திருக்கிறது என்றே கருதவேண்டியிருக்கிறது.

அமெரிக்கர்கள் நவீனயந்திர சாதனங்களை வாங்கி யிருக்கிறார்கள். ஆனாலும் யந்திரத்தொழில் மிகச்சிறிய அளவிலேயிருந்து வருகிறது. சர்க்கார் அதிகமாகக் கவனம் செலுத்துவது காட்டிலாகாவைத்தான். காட்டிலாகாவை விருத்திபண்ணுவதில் பெருமுயற்சிகள் எடுக்கப்பட்டுவருகின்றன. பிலிப்பைன் சர்க்கரையும் இதரப்பொருள்களும் வரியில்லாமலே அமெரிக்காவில் இறக்குமதியாகின்றன.

## கைத்தொழில்

20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் இத்தீவுகளில்வறுமை தலைவிரித்தாடிற்று. நிர்வாகத்தினரின் கவனம்இதிலே அதிகமாகச்செலுத்தவேண்டியதாயிற்று. வாழ்க்கைத்தரம் உயர்வடைய மக்களை வியாபாரத்திலும்,கைத்தொழிலிலும் ஈடுபடும்படித் தூண்டவேண்டும்என்பதைக் கண்டனர். பொருளாதாரநிலை உயர்வடைந்தால்தான் ஜனநாயக முறையில் மக்கள் வாழமுடியும் என்பதைத்தெரிந்தனர். ஆகவே, கைத்தொழில் விருத்திக்கான திட்டங்களைப்போட ஆரம்பித்தார்கள். இத்திட்டப்படி சர்க்கரைத்தொழிலுக்கான ஏற்பாடுகள் செய்தனர்.வருடம் ஒன்றுக்கு 15 இலட்சம் டன் சர்க்கரை உற்பத்திக்கான தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. ஆக, சர்க்கரை ஏற்றுமதி முதல் இடத்தைப்பெறலாயிற்று. வருமானத்திற்குச்சிறந்த வழியாகவும் வேலையில்லாதவர்களுக்கு வேலைதரும் தொழிலாகவும் விளங்கலாயிற்று, இத்தொழில் வளர வளர மக்கள் அறிவும் வளர ஆரம்பித்தது. அமெரிக்காவுக்குச்சென்றுஉயர்தரக்கல்வி கற்றுத்தேசியத் தொழில்களை வளர்க்க முனைந்துவிட்டார்கள். உலக சர்க்கரை மார்க்கட்டில் பிலிப்பைனில் உற்பத்தியாகும் சர்க்கரைதான் பெயர் பெற்றது,

சர்க்கரைக்கு அடுத்தபடியாகமுக்கியத்துவம்வாய்ந்த தொழில் தென்னைமரத்திலிருந்து கிடைக்கும் பொருள்களாகும். இத்துறையை விருத்திபண்ணவும்கவனம் செலுத்தப்பட்டது. எண்ணெய்உற்பத்தி தொழிற்சாலைகள் பெருகலாயிற்று.தென்னையிலிருந்து வெண்ணெய், தேன் முதலியன எடுக்க ஆரம்பித்தார்கள். சோப்பும் இரண்டாந்தரத் தொழிலாக நடைபெற்று வருகிறது. உலர்ந்ததேங்காய்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

## தாதுப் பொருள்கள்

இத் தீவுகளில் கிடைக்கும் தாதுப் பொருள்களில் தங்கம்,வெள்ளி,இரும்பு, தாமிரம், ஈயம் முதலியவைகள் முக்கியமானவைகள். மிண்டானேவ்தீவில் தாமிரம் அதிகமாகக் கிடைக்கிறது. ஆனால் முழுவதும் வெட்டி எடுக்கப்படவில்லை. பாகியோ நகருக்குப் பக்கத்தில் தங்கம் இருப்பதாகக்கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பிலிப்பைனுக்கு வருகிறவர்கள்இதை கிழக்கு ஸ்காட்லாண்டு என்றழைக்கிறார்கள்.

★

# அறிக்கை

20-2-46 மாலை 7-மணிக்கு தஞ்சை ஜில்லா திராவிட கழக அமைப்புச் கூட்டம் கும்பகோணம் நாகேஸ்வரன் வடக்கு வீதியிலுள்ள திராவிடர் கழகத்தில் கூட்டப்பட்டது ஷை கூட்டத்திற்கு தஞ்சை மாவட்டப் பல தாலுக்காவில் இருந்து பிரதிநிதிகள்வராதகாரணத்தால் இந்த அமைப்புக்கூட்டம் 10—3—46 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-மணிக்கு நாகேஸ்வரன் வடக்கு வீதி டி. எம். நாயர் ஞாபகார்த்த கட்டிடத்தில் நடைபெறும். தாலுக்கா கழகங்கள் தங்களுடைய கழகத்தின் தலைவர் காரியதரிசி முதலிய விபரத்தை உடனே கும்பகோணம் கழகத்திற்கு கடிதமூலியம்தெரிவிக்கக்கோருவதோடு, இல்லாததாலுக்காகளில் உடனே கழகத்தை நிறுவி அதன் விபரத்தையும் தெரியப்படுத்தக் கோரப்படுகிறது.

கே. கே. நீலமேகம்,
செயலாளர்,
திராவிடர் கழகம்.

●

## தாராவி திராவிட நாடு பகுத்தறிவு நிலையம்

### 2-ம் ஆண்டு நிறைவிழா

3—2—46ல் எஸ். எம். சால் கட்டிடத்தில் தோழர் எஸ். டி. சவரிதாசன் தலைமையில் கொண்டாடப்பட்டது.

## தேடியது, வக்கீலை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

காணப்பட்டான். டாக்டர், "கை பார்த்தார்" மருந்து கொடுத்தார். ஒரு வாரத்தில் பழையபடி உலவும் நிலை பெற்றான். ஆனால், பழைய நினைப்பு யாவும் அழிந்துவிட்டது. கருணா! எல்லப்பமுதலி! சொக்கலிங்கம்! சொரூபானந்தன்! சடையன்! எல்லாம்மனதிலிருந்தேமறைந்துபோய்விட்டது. எம்பெருமானைக்கூட மறந்துவிட்டான்.பழைய உருவம், உள்ளம், பிரத்யேகமான மாறுதலை அடைந்துவிட்டது. எம்பெருமானுகச் சென்று, எவ்வளவோ முயன்று, பழையநினைவுகளைக் கவனப்படுத்தியபோதும், இருதயநாதனல் எதையும் புரிந்துகொள்ள முடியவில்லை, கண்களில் நீர் ததும்பிற்று எம்பெருமானுக்கு.மண்டையிலேபட்ட பலமான அடியினால், ஏற்பட்ட அதிர்ச்சியிலே, இருதயநாதனுக்கு மூளை கெட்டுவிட்டது என்று டாக்டர் கூறிவிட்டார். பித்தம்பிடித்தவனென்று,வேறுபாட்டு ஆட்டம், சேட்டை, எதினாலும் தெரியவில்லை. இருதயநாதன், தன் எதிரிலே, யாரைக்கண்டாலும்,'வக்கீலா, சார்! நீங்கள்" என்று கேட்பான். வேறு ஒருபேச்சும் பேசுவதில்லை! திக்கற்ற இருதயநாதனுக்கு எம்பெருமான்தான் உதவிசெய்து கொண்டிருந்தான், சாப்பிடுவான், உலவப்போவான், உலவிவிட்டு எம்பெருமான் வீடு வந்ததும், "இருதய! எங்கே அப்பா போயிருந்தே?" என்று எம்பெருமான் கேட்பான். "வக்கீல் வீட்டுக்கு" என்று பதில் கூறுவான் இருதயநாதன்,

யார் வருவார்கள், அவனுக்கு வக்கீல் வேலை செய்ய!!

[கதை கற்பனையே. பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல]

---

## கதிர்வேலு — தனலட்சுமி

தோழர் N. V. நடராசன் சகோதரர் N. V. கதிர்வேலுக்கும், தையூர் T. கிருஷ்ணசாமி அவர்களின் மகள் திருமதி தனலட்சுமிக்கும் 18—2—46 பெத்துநாயக்கன்பேட்டை நடராஜ திருமண மண்டபத்தில், ஆசிரியர் மயிலை சிவமுத்துக்குமாரசாமியார் தலைமையில் சீர்திருத்தத் திருமணம் நடைபெற்றது.

## ஆண்டு விழா


திருவாரூர் திராவிட மாணவர் கழக 3-வது ஆண்டு நிறைவு விழா 17–2–46 அன்று கருணாநிதி தியேட்டரில் நாகை வழக்கறிஞர் டி. கே. விசயராகவலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அது சமயம் தோழர்களான இ. வி. கே. சம்பத் எ. பி. சனார்த்தனம், லூஸ் தவமணிராசன், பி. குழந்தையா, எம். கருணாநிதி, கே. தியாகராசன், பாவலர் பாலசுந்தரம் முதலியவர்கள் சொற்பொழிவாற்றினர். சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. செயலாளர் நன்றிகூறலுடன் விழா முடிவுற்றது.

## பொதுக்கூட்டம்

வெளிப்பாளையம் மணி பகுத்தறிவுக் கழகச்சார்பிலும்; நாகை திராவிடர்கழகச் சார்பிலும் 3—2—46-ல் அவுரிதிடல் மைதானத்தில் வழக்கறிஞர் டி.கே. விஜயராகவலு தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

## வாழ்க்கை ஒப்பந்தம்

7—2—46-ல் அய்யம்பேட்டை ஆர், கிருட்டிணசாமிக்கும், தஞ்சை சாவித்திரி அம்மாளுக்கும் தஞ்சைடவுன் போலீஸ் லயனில் கரந்தை தமிழ்ச்சங்க பேராசிரியர் தோழர், பெரியசாமிப்புலவர் அவர்கள் தலைமையில் வாழ்க்கைஒப்பந்தமும் தோழர் டி. எஸ். சுப்பையாபிள்ளை அவர்கள் புதல்வி மங்கையர்கரசிக்கு புரோகிதமற்ற காதணிவிழாவும் சிரியமுறையில் சிறப்புடன் நடந்ததை முன்னிட்டுத் திராவிடநாடு வளர்ச்சிக்கு ரூபா ஒன்று தரப்பட்டது.



Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—319 Hodgsonpet, Conjeeveram.